# பண்டித நேருமீது வழக்கு!

திராவிடநாடு

மலர் 9 | 20-8-50 | இதழ் 8

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய் நாடு 12 காசு

## பணமோகினி பாய்ச்சல்

## நீதியை அவமதித்தாராம்

## முதலாளித்துவத்தின் 'சுயரூபம்'

முதலாளித்துவம் பசப்பும் மோகினி யென்று நாம் அடிக்கடி கூறி வருகிறோம். கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கவிழ்த்து உருட்டப் பார்ப்பதும் அந்த மோகினியின் செயலாகும் என்று, எச்சரித்தும் வந்துள்ளோம். பணநாயகம், பெரிய சாம்ராஜ்யங்களையும் தனது சுண்டு விரல் காட்டி, சதிராட வைக்கும் சாமர்த்தியம் வாய்ந்தது — ஆகவே அதன் சரசப் பேச்சில் மயங்கி, சல்லாபக் கண் வீச்சில் சுருண்டால் நிச்சயம், முடிவு மோசமாகத்தான் ஆகும் — ஆகவே, அதன் வலையில் சிக்காதீர்! என்று காங்கிரஸ் ஆளவந்தாரை, அன்று முதல் எச்சரித்து வருகிறோம்.

நமது எச்சரிக்கை அவர்களுக்கு எரிச்சலாக இருந்தது. பிர்லா வீட்டு மாடியும், டாடா மாளிகையின் தாழ்வாரமும், டால்மியா தரும் குளிர் பானமும், பஜாஜ் வழங்கும் விருந்தும், சேட்ஜி தரும் இனிப்புமே பெரிது—எல்லாம் அவர்கள் காங்கிரசின்பால் காட்டும் அன்பு என்று கருதினர். கூறினர். 'முதலாளிகள் வலையில் சிக்குகின்றனர்' என்று எச்சரித்த நம்மைக் கண்டித்தனர்.

"ஆகா, வருமோ இவ்வளவு தேசபக்தி யாருக்காவது? என்ன கருணை! கேட்டதும் கொடுத்தார் லட்ச ரூபாய்!" என்று தேசிய ஏடுகள் தெந்தினம் பாட, தேசிய நாதர்கள் அர்ச்சனை செய்ய, இந்திய முதலாளிகள் காங்கிரஸ்காரர்கள் சேர்த்த நிதிக்கெல்லாம் அள்ளி யள்ளிப் பணம் தந்தனர்.

மெதுவாக முற்போக்கு வீரர்களாக இருந்த நேரு போன்றோரைக் கூட, தமது வலையில் வீழ்த்தினர்-தங்களது போலித் தேசபக்தி வேஷத்தை வீசி!

பின் அவர்கள் ஆதிக்கம் காங்கிரசில் வலுத்தது - பொதுமக்கள் நன்மைக்காக இருந்த காங்கிரஸ் முதலாளிகள் முகாமாக மாறியது. தனது அடிப்படைப் பாதையிலிருந்து வழுவியது!

இந்த நிலை வளர்ந்ததும் காங்கிரஸ் ஆட்சியே, முதலாளிகளுக் கேற்றவாறு வளைய வேண்டியதாயிற்று. காங்கிரஸ் ஆட்சியை ஆட்டிவைக்கும் அளவில் இந்திய முதலாளிகள் செல்வாக்குப் பெற்றனர்.

காங்கிரஸ் இன்று வெட்டுக் கிளிகளும் சந்தர்ப்பப் புறாக்களும் உலவும் சோலையாகிவிட்டது—முதலாளிகளின் கைப்பொம்மையான காரணத்தால். கள்ளமார்க்கெட் கொள்ளையடிக்கவும், வேண்டிய சலுகைகளைப் பெறவும், வருமான வரி முதலியவைகள் தராமல் ஏமாற்றவும், சர்க்காரிடம் தங்கட்கிருக்கும் செல்வாக்கைக் காட்டி பாமரரையும் அதிகாரிகளையும் மிரட்டவுமே, முதலாளிமார்கள் காங்கிரசில் சேர்ந்தனர்—கதர் அணிந்தனர்—மூவர்ணக் கொடியை நாட்டினர்—தேசபக்த முலாம் பூசிக்கொண்டனர்!

இந்தச் சூழ்நிலை வளர்வது ஆபத்து, நாட்டை ஆள்வோருக்கு—என்று நாம் சொன்னோம், சொல்லி வருகிறோம், நாடு சுயநலமிகளின் வேட்டைக் காடாகக்கூடாது என்பதால்!

காங்கிரசிலுள்ள முற்போக்கு வாதிகள் சிலர் கண்டித்தனர் — முதலாளிகள் சேர்வது தமது கட்சியைக் கரைத்துவிடும் கரையான்கள் அவர்கள்—பல நாள் கட்டிடம் கண்காணாமற் போய் விடுமெனக் கூக்குரல் எழுப்பினர்!

ஆனால் இது எதையும் காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றார்களில்லை — ஆளவந்தார்கள் "அந்த அரவணைப்பில் இருக்கும் சுகம் அண்டசராசரத்தும் காணக் கிடைக்குமோ?" என்று லாகிரி கொண்டோர் போலப் பேசினர். முதலாளிமார்கள் ஆட்டியபடி யெல்லாம் ஆடினர்.

இப்போது, அந்த முதலாளித்துவம் எந்த அளவிற்குச் சென்றிருக்கிறது என்பதை அறிவிக்கும் ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. இத்தகவல் இந்திய தேசீய ஏடுகளால் திரை போட்டு மறைக்கப்பட்டிருக்கிறது. பம்பாயிலிருந்து வரும் "பிளிட்ஸ்" என்ற வார இதழ்மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

இந்திய பெரும் முதலாளிமார்களில் ஒருவராகிய சேத் ராமகிருஷ்ண டால்மியா இந்திய நாட்டின் பிரதமர் பண்டித நேருமீது வழக்குத் தொடர ஏற்பாடுகள் செய்துகொண்டுள்ளாராம்!

நேரு—இந்தியாவின் அரசியல் தலைவர், ஆசியாவில் பெருத்த செல்வாக்குப்பெற்றவர், அகில உலகிலும் போற்றக்கூடிய அளவில் வளர்ந்திருப்பவர்—இந்திய ராஜ்யத்தை நடத்திச் செல்லும் பிரதம மந்திரி. அவர்மீது வழக்கு—தொடர முயற்சிப்பவர் ஒரு முதலாளி!

செய்தி பரபரப்பானது. ஆனால், தேசிய ஏடுகள் மறைத்திருக்கின்றன. இந்த நாட்டின் பிரதமர்மீது ஒரு முதலாளி வழக்குத் தொடருகிறார்! அதுவும் கோர்ட்டை அவமதித்ததாகக் குற்றஞ் சாட்டி!!

சில மாதங்களுக்கு முன் டால்மியா பத்திரிகைகளில் ஒரு அறிக்கை விடுத்தார். அது காங்கிரஸ் வட்டாரத்தையே அதிர்ச்சிக்கு ஆளாக்கிற்று.

> ### 'ஆரியமாயை' வழக்கு
>
> திருச்சி
> ஆக-14
>
> "ஆரியமாயை" வழக்கு இன்று விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டு மீண்டும் 26—8—50-க்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நூலாசிரியர் அண்ணாதுரை, திராவிடப் பண்ணை உரிமையாளர் கண்ணப்பன் ஆகியோர்மீது மேற்படி வழக்கில் குற்றப் பத்திரிகை படிக்கப்பட்டிருப்பதை வாசகர்கள் அறிவர்.

"காந்தியார் நிதிக்கு நான் பணம் கொடுத்தது என் சுயநலத்துக்காகத்தான். வருமான வரி கொடாமல் தப்பலாம் என்ற எண்ணத்துடனேயே நான் பணம் தந்தேன். பணம் கொடுத்த பணக்காரர்கள் எல்லாம் என்னைப் போன்றவர்கள்தான்!"

என்று, வெளிப்படையாக அவர் வெளியிட்டார். இதைக் கண்டதும் தலைவர்களுக்கும், மந்திரிமார்களுக்கும் ஆத்திரம், திகைப்பு ஏற்பட்டது. குட்டு வெளிப்படுகிறதே என்று கோபத்தின் தூதுவர்களாக ஆயினர். குமுறினர். அறிக்கைகள் விடுத்தனர். "பாவக்கறை படிந்தகாசு—விபரம் கொடு. விசியெறிகிறேன்" என்றார், பட்டேல். நேரு துடித்தார், எதிர் அறிக்கைகள் விடுத்தார். "இந்தப் பூச்சாண்டி யெல்லாம் பலிக்காது. வருமான வரி பரிசிலனைக் கமிஷனுக்குத் தகவல்கள் தந்துவிட்டேன். விரைவில் மார்வாரி வியாபாரிகள் மீதுள்ள வழக்குகளை விசாரியுங்கள். வேகமாக இதுபோன்ற முதலாளிகள் குறித்து வருமான வரி கமிஷன்மூலம் நடவடிக்கை யெடுக்கப்படும்" என்று கோபாவேசத்துடன் வெளியிட்டார்.

அந்த அறிக்கையில், டால்மியா தந்த தகவலால் எவ்வளவு ஆத்திரமும் கோபாவேசமும் நேருவுக்கேற்பட்டது என்பது விளங்கிற்று.

மேற்படி அறிக்கையை வைத்தே, இப்போது டால்மியா பண்டித நேருமீது வழக்குத் தொடர ஆயத்தங்கள் செய்துகொண்டுள்ளாராம்.

"வருமான வரி பரிசீலனைக் கமிஷ (Income tax investigation Commission) னுக்கு நான் ஆலோசனைகள் தந்துள்ளேன்—"

என்று கூறியதை வைத்து, சிம்லாவிலிருக்கும் கீழ் பஞ்சாப் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தாராம். ஆனால், இவ்வழக்கு ஏற்றுக் கொள்வதற்கில்லை யென்று பிரதம நீதிபதி தீர்ப்புத் தந்துவிடவே, மேற்படி உயர் நீதிமன்றத்து "புல் பெஞ்சு" முன்னர் மேற்படி வழக்கைத் திரும்பவும் கொண்டுபோனாராம். அவர்கள், வழக்கைப் பரிசிலனை செய்த பின், "வழக்கு இப் பிரதமர் மீது குற்றஞ் சாட்டுவதாகஇருப்பதால் இந்திய சுப்ரீம் கோர்ட்டிற்குத்தான் இவ் வழக்கை விசாரிக்க உரிமையுண்டு. எங்கட்கில்லை." என்று கூறிடவே, இப்போது டால்மியா தனது புகாரை சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டுபோவதில் முனைந்திருக்கிறாராம். தனது வழக்கை எடுத்து விவாதிப்பதற்குப் பெரிய பண மூலையான டால்மியா வைத்திருக்கும் வக்கீல் யார் தெரியுமா? வங்காளத்தைச் சேர்ந்த சாட்டர்ஜி என்பவராகும்! இவர் வங்கத்தின் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி!!

வருமான வரி பரிசிலனைக் கமிஷன் என்பது விசேஷ அதிகாரங்களுடன், இந்திய சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டதாகும். இக்கமிஷனின் கடமை, வருமான வரி சம்பந்தமான கணக்குகளைப் பரிசிலனை செய்வதும், சந்தேகப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுமாகும். இதன் நடவடிக்கைகளில் தலையிடச் சர்க்காருக்குக் கூட அதிகாரம் அவ்வளவு இல்லை, சர்க்காருக்கும்—சர்க்காரை ஏமாற்றும் பண முதலைகளுக்கும் நடுவேயிருந்து வருமான வரி சம்பந்தமான விவகாரங்களை பைசல் செய்வதே இக்கமிஷனின் பொறுப்பாகும். எனவே கிட்டத்தட்ட இக் கமிஷன் ஒரு நீதிமன்றம் போல ஆகிறது.

கமிஷன் — நீதி பெறும் இடம் ஆக இருக்கிறது!

ஆனால் நேருவோ, "இன்னாரை விசாரியுங்கள்" என்று ஆலோசனை தந்திருப்பதாக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்!!

நீதிஸ்தலத்துக்கு—யோசனை கூறலாமா?—இது தான் டால்மியா எழுப்பும் பிரச்னை. அப்படி ஆலோசனை கூறியது நீதியை அவமதித்ததாகும்—இதுதான் அவர் வழக்குத் தொடர்ந்திருப்பதற்குள்ள காரணமாகும்.

முதலாளி—பிரதம மந்திரி மீது வழக்குத் தொடர்கிறார்! விசித்திரமான காட்சி!! வேறெங்கும் காணமுடியாத சம்பவம்!!!

நேற்றுவரை குலாவினர்—ஆனால் பிணக்கு ஏற்பட்டதும் பிரிந்தது மட்டுமின்றி இப்போது "வழக்கு"த் தொடருகின்றனர். வம்பு செய்கின்றனர்.

முதலாளித்துவத்தின் போக்கிற்கு இச்சம்பவம் நல்லதோர் எடுத்துக்காட்டு. பண மோகினியின் பசப்பில் ஆட்படுவது ஆபத்து என அறிவிக்கும் அபாயச் சங்கு!!

அன்று கொண்டாடினர் காங்கிரஸ் தலைவர்கள்.

இன்று தலையிலே தாண்டவம் புரிகின்றனர் முதலாளிகள்.

விளக்கினால் வேகமும் கோபமும் கொள்ளும் காங்கிரஸ் நண்பர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம் இக்"கண்றாவி"க் காட்சியை!

---

## 28. 8. 50ல்

## மதுரையில்

## அண்ணாதுரை பேசுவார்

தி. மு. க.

# பிள்ளையோ பிள்ளை வியாபாரம்!

## பட்டினிப் பட்டாளத்தின் பவனி!!

## நெஞ்சு கொதிக்கும் நிகழ்ச்சிகள்

பிள்ளையோ, பிள்ளை, பிள்ளை!
பிள்ளை வாங்கலேயோ, பிள்ளை!
பிஞ்சுக் குழந்தை இரண்டு ரூபா!
கொஞ்சம் பெரியது ஐந்து ரூபா!

ஐயோ, விலை கூறுகிறாள், தாய்—விற்பனை செய்ய முனைகிறான் தந்தை—தான் பத்து மாதம் சுமந்து, பாலூட்டி, சீராட்டி, தொட்டிலிலிட்டு, தாலாட்டி, கொஞ்சுமொழி கேட்டுக்களிப்பால்கூத்தாடி, தளர் நடை கண்டு பூரித்துப் போகவேண்டிய தாய், விற்கிறாள், தான்பெற்ற செல்வத்தை—தன் வயிற்றிலுதித்தத் 'தங்கப் பாளத்தை'! மார்பின் மேலும், தோளின் மீதும் தவழ்ந்தாடிய தன் குழந்தையை விற்கிறான் தந்தை—வேதனை, கோரம்—மகா கோரம்!

கதையல்ல இது—கரையாளர், சட்ட சபையிலே தந்துள்ள துயரத் தகவல்! உணவு விவாதத்தின் போது அவர் வெளியிட்டுள்ள பயங்கர உண்மை! வறுமையைப் போக்க, திருநெல்வேலி மாவட்டத்திலே, குழந்தைகளை விற்கிறார்களாம்—என்ன கொடுமை, எவ்வளவு கலக்கத்தைத் தரும் காட்சி!

கண்களிலே நீர் வடிகிறது—இதைக் கேட்கும் பொழுது! கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால், அதுவும் வற்றிப்போய், கண்கள், இரத்தத் தடாகங்களாகி விடுகின்றன, இளகிய இதயம் படைத்தவர்களுக்கு!

ஆளவந்தார் நினைக்க வேண்டும்—வயிற்றிலே ஏற்பட்ட புரட்சி, தம் மக்களை விற்கச் சொல்கிற அளவு விரட்டியடிக்கிறது! இதைக் காணும் பொழுது அவர்கள் தலைகுனியவேண்டும்—சர்க்கார் வெட்கத்தால் நாணவேண்டும். வேதனையால் வெந்து நொந்து போகவேண்டும். விவேகத்தால், உணவு நிலைமையைச் சீர்படுத்தி, ஊராரின் ஏக்கத்தைப்போக்கவேண்டும்.

குடிக்கக் கூழுக்காக, குழந்தைகளை விற்கிறார்கள், குடி மக்கள்—சட்ட சபை உறுப்பினர் கூறுகிறார்! இது சாதாரண செய்தி போல, தோன்றுகிறது, சர்க்காருக்கு! அந்தோ, சரித்திர ஏடுகளைப் புரட்டிவிட்டால், அவர்கள் நடுநடுங்கிப் போய் விடுவார்கள், துடுக்கு மிக்க பல துரைத்தனங்கள், உடுக்கடுக்காகச் சாய்ந்ததற்குக் காரணம், பசிக் கொடுமை தான் என்று பார்க்கும் பொழுதெல்லாம்! பசி தலைமை வகித்து நடத்திய புரட்சிகள் ஏராளம், உலக வரலாற்றிலே! ஆளவந்தாரே மக்களை மாளச் செய்யாதீர்—தாம் பெற்ற மக்களை விற்று, தம் வயிற்றைக் கழுவ வேண்டிய நிலையிருக்கிறது என்று நினைக்கிறபொழுதே நெஞ்சு நடுங்குகிறது!

X X X

வாழப் பிறந்தவர்கள் நாங்கள், வாடவிட்டு விட்டீர்களே! உயிர் உடலில் தங்கும் அளவிற்கு உணவு தாருங்கள்—எங்கள் ஒட்டிய வயிற்றைப் பாருங்கள்—ஒடுங்கிய கண்களைக் காணுங்கள்! எலும்பும், தோலுமாக இருக்கும் இந்தக் கோரக் காட்சி உங்களிடம் பரிதாபத்தை உண்டாக்கவில்லையா?—கேட்டனர், அவர்களும் மக்கள் தான்! இந்தச் சுதந்திர பூமியிலே வாழ்பவர்களே தான்! இருந்தும் வாட்டமே வடிவாக, ஏக்கத்தை இதயமாக, கலக்கத்தை கரங்களாக, கொடுமையே கால்களாக, வேதனை விரல்களாக, புலம்பலே வாயாக,—வருகிறார்கள்!

ஊர்வலம், வந்திருக்கிறார்கள், தலைச்சேரி என்ற ஊரிலேஉள்ள மக்கள்—பட்டினியால் பரிதவிக்கும் மக்கள் எல்லோரும் கூடி, ஊர்வலமாக வந்தனர்!

பட்டினிப்பட்டாளம் புறப்பட்டு பவனி வந்திருக்கிறது—கேட்டோம், இந்தப் பரிதாபச் செய்தியை! திடுக்கிட்டோம் — திக்பிரமையடைந்தோம்! இந்தக் கோரக் காட்சியைக் கண்டும், இருக்கிறது சர்க்கார், வாழ்கிறார்கள் ஆளவந்தார் [illegible] வெட்கம், வெட்கம்!

தலைச்சேரிமட்டுமல்ல, இந்தத் தரணியிலே உள்ள பலப்பல இடங்களில் இந்தநிலை—ஊர்வலமாக நடந்துபோகவும் சக்தியற்றுக் கிடக்கின்ற பட்டினிப் பிரேதங்கள் நமக்கு அறிமுகமானவை, ஏராளம்! பலதடவைகளில் பார்த்திருக்கிறோம் வறுமைத் தேள் கொட்ட, கொட்ட, அந்த விஷத்தால் துடிதுடித்துப்போகும் மக்கள் சமுதாயத்தை—அவர்கள் தொகை வளர்ந்துகொண்டே போகிறது. இது எதிர்கால விபரீதவிளைவின் முன்னெச்சரிக்கை—ஆளவந்தார்கள் கருத்தோடு கவனிக்கவேண்டும் — எதேச்சாதிகார வெறியில் அலட்சியப்படுத்தினால் அபாயம் அவர்களை அணுக்க வெகுநேரம் செல்லாது—அதிகார மதுவருந்தி, வாழப்பிறந்த மக்கள், வயிற்றுக்கின்றி அழிந்துபோகும் நிலைக்கு ஆட்படுத்தினால் அதிக நாட்கள் அவர்கள் பொறுமையை எதிர்பார்க்க முடியாது!

பசி — அது பயங்கரப் புரட்சித்தலைவன்—புரிந்துகொள்ளவேண்டும், காங்கிரஸ்சர்க்கார். அந்தப் பெருந்தலைவன்கீழ் மக்கள் கட்டுப்பட்டு இறங்கிவிட்டால், எத்தனை சக்திபடைத்த சர்க்காரானாலும் சரியவேண்டியதுதான்—அவர்களின் 'இரதகஜ துரகபதாதிகள்' எதுவும் எதையும் செய்து வெற்றிபெற முடியாது' ஆணவத்தால், குருடாகிவிடக்கூடாது, சர்க்கார்—ஆதிக்க ஆர்ப்பாட்டத்தில் செவிடாகி விடக்கூடாது, ஆளவந்தார்!

'பிள்ளையோ, பிள்ளை' என்று அடிவயிறு வலிக்க வலிக்க கூவிடும் குரல், இந்த நாட்டை ஆண்டிடுவோருக்கு அபாய சங்கின் நாதம்—எச்சரிக்கை ஓலம்! 'உணவு தாருங்கள்' என்று கோஷமிட்டுச் செல்லும், ஊர்வலக்காட்சி, துரைத்தனம் நடத்தும் உரிமைபெற்றுவிட்டதாலேயே உயர்ந்துவிட்டோம், இனி ஊர்மக்கள் தங்களை என்ன செய்யமுடியும் என்று விழிகளை மேலே ஏற்றி, உதட்டிலே அலட்சியத்தைத் தூவி, வார்த்தைகளிலே மிரட்டலைத் தடவி, இறுமாப்பு ஆசனத்தில் சாய்ந்துகிடக்கும் ஆட்சி புரிவோருக்கு எதிர்கால புரட்சிக்குரிய சாட்சி!—இந்த உண்மையை உணரவேண்டும். இது ஊழிக்காலப் பெருங்கூத்தின் ஒத்திகை என்பதை பலநாட்டு அரசியல்களைப்புரட்டியவர்கள் அறிவார்கள்—அதனை ஆளவந்தாரும் தெரிந்துகொள்ளவேண்டும். சுயமாகப் புரியும் தன்மையில்லாவிட்டாலும், அறிஞர்களின் அறிவுரைகளை ஏற்று நடக்கும் பெருந்தன்மையாவது பெற்றாகவேண்டும்.

X X X

ஏழு ஆறாகிவிட்டது-கடிகாரம் தலைகீழாகச் சுற்றுகிறது — ஆம், உணவுக்கடிகாரம் எதிர்ப்புறமாக ஓடிக்கொண்டே இருக்கிறது! அதைத் திருத்தியமைக்கும். திறமையற்றவர்கள் கையிலே, 'ரிப்பேர்' பொறுப்பையும் தந்துவிட்டோம், நாம். என்ன செய்வது?

சென்னை சட்டசபை, பிணவீடாகக் காட்சியளித்தது இரண்டொரு தினங்களாக! ஒப்பாரி, புலம்பல், பொருமல், முணு முணுப்பு, சிறு அழுகை, பெருஓலம்—எல்லாம் இருந்தன அங்கு! மகிழ்ச்சி இல்லை அங்கு, விம்மலும், விதிர்ப்புறுதலும், பொருமலும், புலம்பலுமே சூழ்ந்துகிடந்தன. உறுப்பினர்கள், 'ஒப்பாரி' வைத்தனர் என்றால், மந்திரியார் தேறுதல் கூறவில்லை — ஆறுதல் மொழிகள் புகலவில்லை. அரைப்பட்டினி, முழுப்பசியிடம் குறைசொன்ன கதையாகிவிட்டது! குருடன், செவிடனிடம் தன்கொடுமையை எடுத்துக்கூறியதுபோல நிலைமையாகிவிட்டது!

இத்தனையும் உணவு நிலைமைபற்றி, சென்னை சட்டசபையில் உணவு மந்திரியார் ரோச்விக்டோரியா பேசியபொழுதும், அதையொட்டி நடந்த வாதத்தின்போதும் ஏற்பட்ட நிகழ்ச்சியைப்பற்றித்தான் கூறுகிறோம்.

அங்கே நடந்தது வாதமாக நமக்குத் தெரியவில்லை-வேதனை மாநாடாகத்தான் புலப்படுகிறது. ஒருவர் புலம்ப, மற்றவர் அவரைக் காட்டிலும் கதற, இன்றுமொருவர் அழுகைப் பந்தயத்திலே எனக்கிணை நானேதான் என்பதுபோல அழுதிருக்கிறார் — ஆம், நிலைமை அவ்வளவு நெருக்கடி—ஆகவே உறுப்பினர்கள் மக்களின் வேதனையை எதிரொலித்திருக்கிறார்கள். 'கைதூக்கவே' கற்ற கனவான்கள்கூடக் காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள்—அதுவும் கண்டிப்பு கலந்து, கடுஞ்சொற்களை இடையிடையே புகுத்தி, அதட்டலைக்கூட அடிக்கடி நுழைத்து! ஆச்சரியப்படவேண்டியதில்லை—அவசியம்—தேவை-அப்படி நிலைமையை பயங்கரமாக்கிவிட்டது! ஊமைகளைப் பேச வைத்திருக்கிறது — 'பேசாமடந்தையர்' பேசும் பெரு வீரர்களாகிவிட்டனர். பசி வந்திடப் பத்தும் பறந்துவிட்டன!

மந்திரியார், சமாதானத்திற்குத்தேடியலைந்து வார்த்தைகளை அழைத்து வந்திருக்கிறார். உண்மையை மறைக்கப்படாது பாடுபட்டிருக்கிறார்!

* * *

கத்தாழையைத் தின்றுவது கடும் பசியைப் போக்க முனைகிறார்கள் மக்கள்.

கண்ட கண்ட கிழங்குகளை, கீரை வகைகளை, தழைகளையும் விடுவதில்லை.

மாடு தின்னும் பிண்ணாக்கையும் மனிதர்கள் சாப்பிடவேண்டி வந்துவிட்டது!

தாலியை விற்கவும் தயங்கவில்லை நெசவாளர்? — தாலியை விற்கவும் தயங்கவில்லை பலர், தங்கள் குடும்பத்துப் பசியை விரட்டிட-கொடுமை இது!

வறுமையை விரட்ட, குழந்தைகளை விற்கிறார்கள்.

தென் இந்தியாவில் பயங்கரப் பஞ்சமே வந்துவிட்டது—இதில் சந்தேகமில்லை!

(அடுத்த பக்கத்தில்)

## ஆசைத்தம்பி அப்பீல் வழக்கு நிதி

| | ரூ. |
|---|---|
| எம். எஸ். பி. நாடார் நகர சபைத் தலைவர் விருதுநகர் - | 100 |
| எம். எஸ். பி. எஸ் சங்கரலிங்கம் விருதுநகர் | 100 |
| சி. என். அண்ணாதுரை பொதுச் செயலாளர் மத்திய தி. மு. கழகம் | 50 |
| சி. பழனியப்பன் & சன்ஸ் சென்னை | 25 |
| எஸ். நீதிமாணிக்கம் தூத்துக்குடி | 20 |
| ஏ. தருமராஜன் விருதுநகர் | 3 |
| சு. அன்பழகன் மதுரை | 1 |
| ஜி. கலியபெருமாள் குடந்தை | 2 |
| த. சம்பந்தமூர்த்தி பறங்கிப்பேட்டை | 1 |
| ஷண்முகசுந்தர நாடார் விருதுநகர் | 30 |
| வி. வி. வன்னியபெருமாள் நாடார் „ | 50 |
| மதறாஸ் வி. அண்ணாமலை | 2 |
| ஏ. ராமசாமி வடசேரி | 5 |
| ரேவதி பிலிம்ஸ் பொள்ளாச்சி | 6 |
| எம். குப்புசாமி மேட்டூர் | 5 |
| எஸ் கனகசுந்திரம் | 3 |
| சென்னியப்பன் நாகர்கோயில் | 2 |
| ஏ. எம். நாகலிங்கம் நாகர்கோவில் | 1 |
| வெ. கோவிந்தராஜன் பழனி | 1 |
| டி. ஏ. முகம்மதுயூசப் செங்கற்பட்டு | 1 |
| ஏ. தமிழரசன் மேட்டூர் | 1 |
| ஜி. சின்னப்பா பெங்களூர் | 10 |
| மா. சண்முகம் சென்னை | 1 |
| கே. கே. நீலமேகம் குடந்தை | 20 |
| வா. அ. மு. ரத்தினம் & பிரதர்ஸ் விருதுநகர் | 50 |
| மொத்தம் வரவு | 490 |

K. S. S. அய்யாச்சாமி
பொருளாளர்
அப்பீல் வழக்குநிதி
விருதுநகர்.

# தமிழ்ச் சோலையில் பச்சோந்திகள்!

## என்று ஒழியும் வகுப்புவாதம்?

## இந்திக்கு இடம் வேண்டுமாம்!!

பச்சோந்திக்குள்ள குணம் தான் இருக்குமிடத்துக்குத் தக்கவாறு தன்னை மாற்றிக்கொள்வதுதான் என்று சொல்வார்கள். இடத்துக்குத் தக்கபடி தன் நிறத்தை மாற்றிக் கொண்டாலும் அதன் இயல்போ அல்லது குணமோ சிறிதளவும் மாருதாம். எந்த இரை, தனக்குப் பிடித்தமோ அதைப் பிடித்து உண்டே ஜீவிக்குமாம். தன் ஆசைக்குகந்த இரையைப் பெறுவதற்காகவே, தன் நிறத்தை, அது மாற்றிக்கொள்ளும் என்றும் சொல்வார்கள். அதே போல மனித வர்க்கத்திலும் பச்சோந்திகள் இருக்கவே செய்கின்றனர். பசப்பு வார்த்தைகள், சாகச மொழிகள், நளினமான பேச்சு, நயமான சொல்வீச்சு ஆகியவைகள் மூலம் சமயத்துக் கேற்றபடி தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் பேர் வழிகள்.

இவர்கள் கண்ணோட்டம் காரியத்தில்தான் இருக்கும். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண் என்று சொல்வார்களே, கிராமப் புறங்களில், அத்தனையும் உண்மை இவர்கள் விஷயத்தில். கடந்த 12ந் தேதி சென்னை சட்ட சபையில் நடைபெற்ற விவாத விபரங்களை ஊன்றிக் கவனிக்கும் போது சமுதாயத்தில் உலவும் பச்சோந்திக்கும் குணம் படைத்தோரின், சுயரூபம் விளங்குகிறது. இந்தி கட்டாயமில்லை — இஷ்டபாடம் தான் என்று அண்மையில் மாகாண சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது குறித்துத்தான் விவாதம் நடைபெற்றது. சர்க்கார் பிறப்பித்த மேற்படி உத்தரவின் விளைவாக, தாய்மொழிக்கு முதலிடம் கிடைத்திருக்கிறது. முதல் மொழி — தாய்மொழி என்பதும் உறுதியாக்கப்பட்டிருக்கிறது — இந்த விஷயம் குறித்து சட்ட சபையில் விவாதிக்கப் படுகையில், ஒரு உறுப்பினர் பேசியிருக்கிறார். "பிராமணர்களது பாஷை சில மெம்பர்கள் சொன்னதுபோல சமஸ்கிருதமல்ல. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் இவைகளில் ஏதாவது ஒன்றுதான்" என்பதாக. கூறியவர் வேறு யாருமல்ல! பிராமண வகுப்பைச் சேர்ந்த என். எஸ். வரதாச்சாரிதான்!!

வரதாச்சாரியார் வாசகத்தைக் கண்டதும், "பார்! அவர்கள்கூடத் தங்கள் தாய்மொழி சமஸ்கிருதம் என்று சொல்லவில்லை. என்னே, திராவிட மொழிகளின் பால் அவர்களுக்கு மலர்ந்திருக்கும் ஆசை!" என்று, சிலருக்காவது எண்ணத் தோன்றும். வரதர் என்று மட்டுமல்ல அவரைச் சேர்ந்த பலர் இதற்கு முன்பும், இப்போதும் தங்களுக்கு தமிழ்மீது அபாரகாதல் இருப்பதுபோலவே காட்டிக் கொள்ள விரும்பி அதன்படி நடந்து வருகின்னர். தமிழின் அருமை, அதன்பண்டையப்பெருமை, ஆகியவைகள் குறித்து தமிழ்மகனைவிட வீராவேசமாகப் பேசுவார்கள். இந்த போலித் "தமிழ் மகன்"களின் தமிழன்பு, ஏட்டளவிலோ அல்லது வாயளவிலோதான். இனிக்கப் பேசுவர் ஆனல் இயற்கையான சுபாவம் மட்டும் என்றும் மாருது! இடத்தையும் சூழ்நிலையையும் கவனித்து அதற்கேற்றபடி தங்கள் போக்கையும் நடவடிக்கைகளையும் மாற்றிக் கொள்வது "அவர்களுக்கு" என அமைந்த ஒரு தனிக்குணமாகும். பிறர் தன்னை ஏளனமாகப் பேசினாலும், இழித்துக் கூறினாலும் சிரித்துவிட்டுப் போவதும் ஆனல் சந்தர்ப்பம் வரும்பொழுது சாதுர்யமாகப் பழிவாங்குவதும், அந்த தனிக்குணத்தின் விசேஷ மகிமையால் தான். அதன்படி நிலைமையை மனதில் வைத்து பச்சோந்திகள் போல மாறினாலும் அவர்கள் உண்மைச் சுபாவம் மட்டும் மாறிவிடுவதில்லை— பச்சோந்திக்கு இரைமேல் மோப்பம் இருப்பது போல "அவர்களுக்கு" காரியத்தின்மேலேயே கண்ணிருக்கும்.

சட்டசபையில் இந்தியை விருப்பபாடமாக்கியும் தமிழுக்கு முதலிடம் தந்தும் கல்வியமைச்சர் மாதவமேனன் அண்மையில் பிறப்பித்த உத்தரவு குறித்துப் பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். முஸ்லிம்லீக் உறுப்பினர்களும், காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாத எம். எல். ஏக்களும் சர்க்காரின் இநடவடிக்கையை வரவேற்றுப் பேசியிருக்கின்றனர். விவேகமான காரியம் என்று பாராட்டியிருக்கின்றனர்.

ஆனல், சிலர்மட்டும் சர்க்காரின் இந்த உத்தரவில் திருத்தங்களும், கண்டனங்களும் வெளியிட்டிருக்கின்றனர்.

சர்க்கார் இந்தி எதிர்ப்புக்காரர்களுக்குப் பயந்துவிடுவதா?

இந்தி தேசியமொழியாயிற்றே — அதையா புறக்கணிப்பது?

அவசியம் இந்தியைக் கட்டாயபாடமாக்க வேண்டும்.

என்பதாக அவர்கள் பேசியிருக்கின்றனர். அப்படிப்பேசியவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த எல். என். கோபால்சாமி, வைத்தியநாத அய்யர், வரதாச்சாரி ஆகியோர்தான்.

பார்ப்பனரல்லாத உறுப்பினர்கள் எல்லாம், காங்கிரஸ்காரர்களாயிருந்தும், சர்க்கார் தமிழுக்கு ஏற்பட்ட அநீதியை நீக்கியது குறித்து மகிழ்ச்சியைத்தெரிவித்திருக்கின்றனர்.

இந்தியை, ஆதியில் நாம் அமைச்சராயிருந்த போது புகுத்திய அவினாசிலிங்களுரே தற்போதைய கல்வியமைச்சரின் உத்தரவைப் பாராட்டியிருக்கிறார். தமிழுக்குச் செய்யப்பட்ட அநீதிகளைப் பட்டுவிட்டதாக அறிவித்திருக்கிறார்.

ஆனல், "அவர்களோ" "இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டும். அப்போது தான் இந்தியன் என்ற நிலை மலரும்" என்ற அர்த்தத்தில் பேசியிருக்கின்றனர்!!

பேசியவர்கள் மூவரும் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள்தாம். தமிழ் — தமது தாய்மொழி என்று வாய்ப்பறைச் சாற்றுவதில் சளைக்காத தோழர்கள்தான். மூவரில் ஒருவராகிய வரதர், தமது பேச்சின் துவக்கத்தில் 'தமிழ் எங்கள் மொழியல்லவோ' என்று வாய் இனிக்க வார்த்தைகளைச் சொரிந்தவர்தான். எனினும் இந்தி விஷயம் வந்ததும் அவர்களின் இயற்கை சுபாவம் வெளிப்பட்டிருக்கிறது! இந்திய அரசியலமைப்பைக் காட்டி சர்க்காரை பயமுறுத்தியும் இருக்கின்றனர் — அந்த அளவில் இந்த "தமிழ் மகன்"களின் தாய்மொழிப் பற்றும், தமிழ் நாட்டுக் காதலும் இருக்கின்றன! வேஷத்தைபோடுவதும், விஷயத்தைச் சாதிப்பதுமாக வேடிக்கை விளையாட்டில் ஈடுபடும் விபரீத புத்தியினராயிருக்கும் "அவர்கள்" வகுப்புவாதிகள் — சாகசத்தோடு நடித்துத் தங்கள் காரியங்களுக்குக் கேடு வராமல் தடுத்துக் கொள்வதில் எவ்வளவு கண்ணுங்கருத்துமாய் இருக்கிறார்கள் என்பதை இந்தச்சம்பவம் விளக்கும்.

ஆண்டு பலவாக, இங்கு வசித்து வந்தாலும் அவர்கள் தங்கள் ஆதிபத்யம் விரியவேண்டும் என்பதில் ஆசையுடையவர்களாக இருப்பார்களே தவிர, உண்மைத் தமிழ்மகன்களாக ஆகிவிடமாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டும்.

'என்ன கிடைக்கும்?' என்று சோலையில் பச்சோந்தி உலவுகிறது. 'எப்படி நமது ஏதேச்சாதிகாரத்தை வளர்க்கலாம்" என்று வகுப்புவாதிகள், அலைகிறார்கள். தமிழ்ச்சோலையை அலைக்கழிக்கும் இந்தப் பச்சோந்திகள், சோலையின் வளர்ச்சியில் அக்கரை செலுத்துவதுபோலக் காட்டிக்கொண்டாலும் அத்தனையும் தமதுசுயநல ஆதிபத்யத்தை வளர்க்கத்தான் என்பதை தெளிவாக்குகிறது, இந்த நிகழ்ச்சி.

எப்போது இந்தப் பச்சோந்தித் தன்மை மாறி, உண்மையான அன்பும் ஆதரவும் தமிழ்நாட்டின் மீது "வகுப்புவாதிகளுக்குப்" பிறக்குமோ?

✻

மதுரை:

24—7—50-ல்தெற்கு வட்டார பாண்டிய வேளாளர் தெருவிலுள்ள இளங்கோ மன்றக் கூட்டம் தி. ப. கலியாசு தலைமையில் நடைபெற்றது. அ. பிச்சை, பாலு: இராசு, முனியன் ஆகியோர் பேசினர்.

✻

(முன் பக்கத் தொடர்ச்சி)

சட்ட சபையிலே இந்தப் பஞ்சப் பாடலைக் கேட்கிறோம். பயங்கரப் பஞ்சம் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது! இந்த வயிற்றுக் கொடுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சென்னை மட்டுமல்ல, டெல்லியும் உதவி செய்யவேண்டும் என்று வேண்டி நிற்கின்றனர், உறுப்பினர்கள். ஆனல் மாகாண மந்திரியும் மனமிளகிடவில்லை — மத்திய மந்திரியோ, திடீர்த்திட்டங்களைச் சொல்லித் திகைக்க வைப்பதிலேயே தனது 'கைவரிசை'யைக் காட்டுகிறார்!

அரசியலில் பெரிய பரபரப்பை ஏற்படுத்திவிட்ட அரிசியியலைப் பற்றிய அக்கரை இருப்பதாகத் தெரியவில்லை.

உணவுப் பகுதி நிர்வாகம் சரியில்லை, சேகரிப்புத் திட்டத்தில் தெளிவில்லை, அதிக உணவு உற்பத்தித் திட்டம் அபத்தக் களஞ்சியம், உணவு கொடுப்பதிலும், வாங்குவதிலும் ஊழல்மயம், சர்வமும் சோளாறு உலகமாகிவிட்டது— இப்படியெல்லாம் குற்றச்சாட்டுகளை வீசியுள்ளனர். உணவு மந்திரியார், ஒரு சிறு சிரிப்பால், இத்தனையும் தள்ளிவிட்டார்!

உணவு நிலைமையின் பயங்கரத்தை உணர்ந்திருக்கிறேன் — மறுக்கவில்லை எனினும் செய்யக் கூடியவை அத்தனையும் செய்து வருகிறோம் என்று கூறுவதிலே திருப்தியடைந்து விட்டார்— வெற்றியடைந்து விட்டதாகக் கருதிக் களிப்படைந்துவிட்டார், விக்டோரியா!

வெந்த புண்ணிலே வேல் நுழைக்கிறார், பிரதமர் ராஜா! நாட்டிலே நடமாடும் சிலபத்திரிகைகளைக் குறைகூறி பெருமூச்சு விடுகிறார், உணவுக் குறைப்பாட்டை ஒழிக்க ஒரு பெருங்காரியத்தை செய்துமுடித்துவிட்டதாக எண்ணிக்கொண்டு!

பாதை தவறுகிறார் பிரதமர்— உண்மைகளை எடுத்துச் சொலவதால் பீதி வளர்கிறது என்று சொல்லத் தெரிந்துகொண்ட பிரதமருக்கு, அதனால் ஊராளுவோரின் பார்வைக்கு, அந்தப் பயங்கரம் கொண்டுவரப்படுகிறதே என்ற உண்மை புலப்படவில்லை. சர்க்காரின் துரிதமான மருத்துவம் தேவை, இந்தத்தயாமிக்க பசிநோயால் வாடிடும் மக்களுக்கு என்ற நல்லெண்ணத்தோடு நாம் கொடுமையை எடுத்துக் காட்டுகிறோம் — வேதனையை விளம்பரப்படுத்துகிறோம் — பட்டினி ஓலத்தை ஒலி பரப்புகிறோம்'—சர்க்காரை கவிழ்க்க அல்ல, கவிழ்ந்துகிடக்கும் சர்க்காரை நிமிர்த்தி, நேரான பாதையில் சென்று உடனடியாகச்செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யத்தூண்டுவதற்காகவே! பிரதமர் புரிந்துகொள்ள வேண்டாமா இதனை?

இந்த மண்ணிலே மனிதன் பிறக்கிறன்— உணவு அவனுக்குரிய அடிப்படைத்தேவை — ஜீவாதாரப் பிரச்னை! அந்தத் தேவையைக்கூடப் பூர்த்தி செய்யமுடியாத ஆட்சி இருந்தென்ன, ஒழிந்தால்தான் என்ன என்றுதானே கேட்கத் தோன்றும்!

உணவுப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் திட்டங்கள் பலவற்றைத்தீட்டிக் காட்டிக் காட்டி அலுத்துவிட்டோம் நாம். சமயம் நேரும்பொழுதெல்லாம் கனிவாக—கடுமையாக — இனிப்பாக, கசப்பாக — பலமுறைகளில் சொல்லிப்பார்த்துவிட்டோம்! உள்ளதைச் சொன்னல் கொள்ளைக் கண்ணனுக்கு கோபமாம் — அப்படி நடந்து கொள்ளக்கூடாது, நாட்டின் பிரதமர்! இப்பொழுதுள்ள காங்கிரஸ் சர்க்கார் வந்ததிலிருந்து உணவுக்கடிகாரம் தலைகீழாகவே ஓடிக்கொண்டிருக்கிறது—மொத்த உணவு பன்னிரண்டு அவுன்ஸாக்கி, அதில் அரிசி எட்டு, ஏழு, ஆறு......... என்று பின்பக்கமாகவே போய்க்கொண்டிருக்கிறது! வெட்கி வெட்கித்தலைதாழ்த்தவேண்டும்— வாழ்விப்போம் நாங்கள் என்று வாக்குறுதி தந்து வந்தோமே, இப்பொழுது வாழவைக்காவிட்டாலும், நடைப்பிணமாக உலவக்கூட விடாமல் சாகடிக்கிறோமே சோற்றுக்கில்லாமல் என்று எண்ணி ஆளவந்த காங்கிரஸ் சர்க்கார் கண்ணீர் சிந்தவேண்டும்.

வியர்வைக் குளத்திலே இன்று கண்ணீரும் கலக்கிறது—இது அபாயத்தின் அறிகுறி! இதனை மூடிவைப்பதாலே காரியம் பலித்து விடாது. ஆளவந்திருப்போர் அலட்சியப்படுத்திவிடக் கூடாது. பிள்ளையை விற்பது என்பது, இளைய மனத்தின் இறுதி நிலையின் கடைகட்டம்— அடுத்தது புரட்சி—அதற்குமுன் நடவடிக்கை ஊர்வலம், அதையும் பட்டினிப் பட்டாளம் செய்து காட்டிவிட்டது. அபாயம் கணத்திற்கு கணம் நெருங்கிக்கொண்டிருக்கிறது—எச்சரிக்கை இது—விவேகம் தேவை, சர்க்காருக்கு!

திராவிடநாடு

ஞாயிறு] 20-8—50 [காஞ்சி

# மூன்றாண்டுகள்

★

சுதந்திரம் வந்துவிட்டது — சுகம் பிறந்துவிட்டது என்று பறையடித்தனர். அந்நியர் ஆதிக்கம் இறந்தது என்றதைத் தவிர வேறெதுவும் நடந்துவிடவில்லை,

மூன்றாண்டுகள் முடிந்துவிட்டன—இந்திய ஆட்சி, கைமாறி! வெள்ளையர் வெளியேறினர், காங்கிரசார் ஆட்சிபீடமேறினர். அவர்கள் வந்து வாட்டத்தை ஓட்டவில்லை, வறுமையை விரட்டவில்லை, துன்பத்தைப் போக்கவில்லை.

ஆனந்த சுதந்திர மடைந்து விட்டோம் என்று ஆர்ப்பாட்ட புரியினராக ஆடவில்லை, பாடவில்லை அவர்கள். சர்க்காரும் ஆகஸ்ட் 15ஐ ஆரவாரத்தோடு நடத்திடவோ, நடந்ததா என்று கண்காணிக்கவோமுனையவில்லை.

இன்றுள்ள நாட்டின் நிலை, அவர்களின் வாயை அடக்கிவிட்டது—இப்படி அப்படி அசையக் கூடவில்லை.

சுதந்திரத்தைப் பெற்று மூன்றும் ஆண்டு முடிவதற்குள் எங்கு நோக்கினும் பசி, பசி என்று பதறிடும் கோரக் காட்சி—திரும்பும் பக்கம் எல்லாம் நாம் சந்திப்பவை அழுகை, கண்ணீர், சோகம், துன்பம்! மலர்ந்த முகத்தை, மகிழ்ச்சி நடையைய மக்களிடையே காணமுடியவில்லை. குதூகலத்தோடு தெருக்கோடியில் வரும் கணவனை, மலர் முகம் காட்டி, குறு நகைப்பால் வரவேற்கும் மனைவியை, இந்தக் காட்சியைக்கண்டு கைகொட்டி, தெருப் புழுதியோடு விளையாடும் குழந்தையை நாம் பார்க்க முடியவில்லை. உள்ளே நுழையுமுன் அரிசியில்லை என்ற 'அன்புக் குரல்' கேட்கிறது—பாலுக்கு சர்க்கரையின்றி குழந்தை அழுது அழுது முகம் வீங்குகிறது—இப்படி அவலக் குரல்தான், குடும்பங்களில் எதிரொலிக்கிறது.

ஆளவந்தவர், ஆளும் வழியறியாது, முறை தெரியாது வேண்டாத திட்டங்களைத் தீட்டி, தீட்டி மக்களின் மனக்கசப்பைத் தான் திரட்டினர். இதுவரை பொருளியல், அரசியல், சமூகவியல், வேறு எத்துறை பற்றியும் அவர்கள் போட்ட திட்டமெல்லாம் வீண் — விவேகத்தின் துணையில்லாதது—வீராப்புக்கும், வெட்டிப் பெருமைக்கும் பலியாகி, மக்களின் கண்ணீரைப் பெருக்கிவிட்டனர்.

அதுவும் இந்த ஆண்டு உணவுக்கும் வழிகாட்டாது விட்டு விட்டனர். பட்டினிச் சாவுகள் நாளும் நாளும் எண்ணிக்கையில் பெரிதாகின்றன —கேட்க பயங்கரமாக இருக்கிறது, இந்தச் சாவுக் கதைகளை! பிஹாரிலே, வங்கத்திலே எப்பகுதியிலும் உணவுத் தட்டுப்பாடு—சென்னை மாகாணத்தில் உணவு நிலைமையை எடுத்துச் சொல்லவும் நடு நடுங்குகிற நிலைமை! எங்கும் அரிசி கிடைக்கவில்லை. மத்திய ஆட்சியும் இந்த சங்கடமான நிலைமையில் ஓடிவந்து உதவி செய்யவில்லை

மூன்றாண்டுகள் முடிந்து விட்டன—முணுமுணுப்புத்தான் வளர்கிறது. உள்நாட்டில் இந்த நிலை என்றால், வெளிநாட்டுக் கொள்கையிலும் விரும்பத் தகாத போக்கிலேயே நடந்துகொள்கிறது. கொரியாப் போரில் அமெரிக்காவின் பக்கத்தில் நிற்பதாகவே இந்திய அரசாங்கம் நடந்துகொண்டது. நாம், இதுபற்றி பல முறை எழுதியிருக்கிறோம். வெளிநாட்டுக் கொள்கையிலே, இந்தியா சோரம் போகிறது, ஒரு பெரிய பயங்கரப்படுகுழியில், வளரும் நிலையிலே உள்ள இந்தியாவைத் தள்ளிவிடும் என்று 'அபாய அறிவிப்பு' விடுத்தோம்.

சுதந்திரத்திருநாள் என்று 'ஒப்புக்கு' கொண்டாடி விட்டு, ஓய்வாக இருக்கும் அவர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இந்த மூன்றாண்டுகளில் நாட்டின்உள்ளும்,புறமும் குமுறும்நிலையைத் தானே ஏற்படுத்தி விட்டோம்—எங்கும் மலர்ச்சி இல்லையே, களிப்பைக் காணமுடியவில்லையேஎன்று யோசிக்க வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சி, இந்தியாவின் ஆளும் பொறுப்பை ஏற்றவுடன் எதேச்சாதிகார பாதையைத் தெரிந்தெடுத்துக் கொண்டது. 'தனக்கிணை தலைவரில்லை' எனத் தருக்கு விருத்தம் பாடுகிறது அடக்குமுறை நாட்டியமாடுகிறது. ஏகாதிபத்திய வெறி பிடித்தபடித் திரிகிறது. அதிகார மதுவால் தன் நிலையுணராது கட்டுக் கடங்காத போக்கில் நடக்கிறது. தங்களுக்குள்ளாகவே போட்டி, பலப் பரீட்சை நடத்திக் கொள்வதிலே காலத்தை விரயமாக்குகின்றனர். தாங்கள் இருக்குமிடம் எத்தகைய மதிப்பும், பொறுப்பும் வாய்ந்தது என்ற நினைப்பே இன்றி தங்களுக்குள் கட்சி கட்டுதல், 'நான் பெரியவனா, நீ பெரியவனா' என்று போட்டியிடுவதையே பெரிதாகக் கொண்டுவிட்டனர். எதிர்க் கட்சிகளை ஒழித்துக் கட்டுவதிலே மட்டும் ஒன்றாகிவிடுகின்றனர் — எவ்வளவு அக்கிரமாயுதங்களைப் பயன் படுத்த முடியுமோ அத்தனையையும் பயன் படுத்திடத் தயங்குவதில்லை.

மூன்றாண்டுகளில், காங்கிரசார் சாதித்துள்ள மகத்தான சாதனைகள் — இதோ நம் கண் முன்னால்! பசி—பட்டினிச்சாவு—உணவுத் தட்டுப்பாடு! எங்கு பார்த்தாலும் இல்லாமை, வறுமை! தொழிலாளர்களின் துவண்ட வாழ்வு! அவர்களின் சிந்தும் கண்ணீர் —பொழியும் குருதி! உலகப்போர்ச்சுழலிலே சிக்கித்தவிக்க வேண்டிய பரிதாப நிலை! சுயநலப் போட்டி!

தடியடி, துப்பாக்கிப்பிரயோகம், கண்ணீர்ப் புகைவீச்சு—இவைதான் அடிக்கடி நடக்கும் அரசியல் விழாக்கள்!!

சுதந்திரம் பெற்று, மூன்றாண்டுகள் கடந்து விட்டன—ஆனால் சுகம் இல்லை—துயரம் பெருகுகிறது!

—✻—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### மாணவர் எழுச்சி

பச்சையப்பன் கல்லூரி மைதானத்தில் மாணவர்கள் கூடி, அங்கிருந்து ஊர்வலமாகக் கிளம்பி, பூந்தமல்லி ஹைரோட்வழியாகச்சென்று நேபியர் பார்க்கில் வந்து முடிந்தது. மாணவமணிகளின் அணிவகுப்புக் கண்டுநடுநடுங்கி யிருக்கும் வகுப்பு வெறி—அப்படி வானை முட்டும்படி அவர்கள் முழக்கமிட்டவண்ணம் தங்கள் ஊர்வலத்தை நடத்தினர்.

பல பள்ளிகளிலிருந்து வெளிவந்த மாணவர்கள் ஒரு தனி ஊர்வலம் நடத்திட வாலாஜா ரோட்டில கூடினர். மாணவத் தோழர்களின் ஊர்வலம் திருவல்லிக்கேணி போலீசாரால் தடைப் படுத்தப்பட்டு, கலைந்தது. ஆனால் மேலுங் கொஞ்சதூரம் சென்றவுடன் மீண்டும் ஊர்வலம் தொடங்கிற்று. போலீசார் மறுபடியும் கலைந்து செல்லக் கேட்டுக்கொண்டனர். உணர்ச்சி வேகத்தில் மாணவர்கள் மறுக்கவே, பத்துப் பேர்கள் வரை போலீசாரின் பாதுகாப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பிறகு அவர்களை வெளியே அனுப்பிவிட்டனர்.

### பல்வேறு பகுதிகளில்

சென்னையில் உள்ள எல்லாப்பகுதிகளிலுமிருந்தும் சிறு சிறு ஊர்வலங்கள் புறப்பட்டு வந்து முக்கிய ஊர்வலத்தோடு கலந்துகொண்டன. சென்னை முழுவதும் அன்று பரபரப்பாகவே இருந்தது. ஆங்காங்கே கோஷங்களின் எதிரொலி கேட்டவண்ணமிருந்தது. சுவர்களிலும், தார் ரோட்களிலும், சமூக நீதி வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு உருவங்களில், வார்த்தைகளில் எழுதப்பட்டிருந்தன!

### பல கட்சிகளின் படை

இந்த ஊர்வலத்தில் பல கருத்து கொண்டவர்கள், பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம், ஜஸ்டிஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி முதலிய பல இயக்க வீரர்களும் பெரும் பங்குகொண்டு ஊர்வலத்தின் வெற்றிக்காக உழைத்தனர்.

### பொதுக்கூட்டம்

மாலையில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு 'விடுதலை' குருசாமி தலைமை வகித்தார். பெரியார் சொற்பொழிவாற்றினர்.

### டி. டி. வி. உயர்நிலைப்பள்ளியில்

சென்னை தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 16-8-50 அன்று பள்ளிக்குச் செல்லவில்லை. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்குத் தங்கள் ஆதரவைக் காட்டவே அன்று 'ஸ்ட்ரைக்' செய்தனர். பள்ளிக்கு எதிரிலேயே மாணவர்கள் அனைவரும் குழுமியிருந்தனர். 'கம்யூனல் ஜி. ஓ. வேண்டும்' 'இந்திய அரசியல் அமைப்பைத் திருத்து' என்று பொறிக்கப்பட்ட அட்டைகளைத் தாங்கி நின்றனர். அன்றைய வேலை நிறுத்தம் வெகு அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடந்தது. ஊர்வலம் செல்ல அனுமதி கிடைக்காததால், விரைவில் ஊர்வலமும் நடத்த முடிவு செய்து மாணவர்கள் கலைந்து செல்லுமுன் அவர்கள் எழுப்பிய முழக்கங்கள் வானைப் பிளந்தன. வீறிட்டெழுந்த மாணவர் கூட்டத்தைக் கண்ட 'வகுப்புவாதிகள்' நடுங்கிப் போயினர். திராவிட இன உரிமைப் போரை நடத்த இப்பள்ளி மாணவரே போதும் என்று ஆர்வம் பொங்க, உணர்ச்சி வழிய மாணவ மணிகள் ஓடியாடி ஒழுங்குபடுத்துவதையும், இலட்சிய முழக்கங்களை ஒலிப்பதையும் கண்டவர் கூறாமல் போகார். மாணவத்தோழர்கள் கண்ணன், பெருமாள் ஆகியோர் பார்த்தவர் பாராட்டும்வகையில், கேட்டவர் களிக்கும் முறையில் இந்த வேலை நிறுத்தத்தை நடத்தினர்.

### கைதாகினர்!

கோரடாச்சேரியில்அபிவிர்த்தீஸ்வரம் திராவிட இயக்கத் தோழர்கள் 14-8-50ல் ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தனர். கொரடாச்சேரியைச் சுற்றியுள்ள பலகிராமங்களிலிருந்து மக்கள் வந்திருந்தனர். ஊர்வலம் தொடங்கிகொஞ்சதூரம்செல்வதற்குள் போலீஸார் குறுக்கிட்டு முன்னிருந்து நடத்தியத்தோழர்களைக் கைது செய்தனர். கைதான தோழர்கள் நாலில் ஒன்று எஸ். எம். வைத்தியலிங்கம் அபிவிர்த்தீஸ்வரம் பி. டி. அரசு, ஏ. நடராசன், டி. சாமிநாதன், திருமலைராயன் பட்டினம் எஸ்: முத்தையன், சொல்லூர் கே.டி மகாலிங்கம் கப்பல்உடையான் ஆர். பி. வேங்கடசாமி ஆகியோர்.

### கிராமங்களிலும் கிளர்ச்சி!

14—8—50 விளந்தைக் கிராமத்து உயர்தர பாடசாலையிலிருந்தும், ஆரம்பப் பெண்பாடசாலையிலிருந்தும் மாணவ, மாணவிகள் சுமார் 250 பேருக்குமேல்கூடி பள்ளியில் அருகிலிருந்து துவக்கி, கடைவீதியில் முடிந்தது ஊர்வலம் — பிறகு கூட்டம் நடத்தி; மேலும் தொடர்ந்து அடுத்தகிராமமாகிய அகரம் சென்று, ஊர்வலம் நடத்தித் திரும்பினர்.

### காஞ்சியில்

14-8-50ல் காஞ்சிபுரத்தில், கட்சி வேறுபாடின்றி ஒத்துழைத்தனர். அன்று கடைகள் எல்லாம் மூடப்பட்டன. கல்லூரி மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் மு. இரத்தினம் தலைமை தாங்கினர். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களான சி. வி. எம். அண்ணாமலை, சே. கோ. பெருமாள், இ. எதிராஜ், எம். சண்முகம், தி. கழகத் தோழர்கள் இராசமாணிக்கம், சபாபதி மற்றும் பலரும் கலந்துகொண்டனர். காஞ்சிபுர நகரவியாபாரிகள் கடைகளைமூடி சமூக நீதிக்குத்தங்கள் ஆதரவைக் காட்டியது மிகவும் போற்றுதற் குரியது.

### வேலூரில் விழிப்புணர்ச்சி

14-8-50-ல் பள்ளி மாணவர்களும், பிற தோழர்களும் ஊர்வலம் நடத்தினர். ஊர்வலத்தில் ஊர் முக்கிய நண்பர்கள் அனைவரும் கருத்து வேறுபாடின்றி கலந்துகொண்டனர். வியாபாரிகளும் தத்தம் கடைகளை மூடிவிட்டனர். ஊர்வலம் டவுன் ஹாலோடு முடிந்தது. முனிசிபல் கவுனசிலர் கே. அண்ணாமலை தலைமையில் பொதுக் கூட்டம் நடந்தது. தோழர்கள் லெனின், வேணு அண்ணாமலை, குப்புசாமி, சாரதி ஆகியோர் பேசினர். சமூக நீதிக்கு வரும் ஆபத்து எதுவானாலும் எதிர்த்துப் போராடி காப்பாற்றியே தீருவோம் என்று முழக்கமிட்டனர். ஊர்வலமும், கூட்டமும், வேலூர் மக்களிடையே ஒரு புது உணர்ச்சியை, எழுச்சியை ஏற்படுத்திவிட்டன.

### வேலூர் குமரன் படிப்பகம்

13-8-50ல்வேலூர்குமரன்இலவசவாசகசாலைசார்பில்கூடியகூட்டத்தில்எஸ்.நாராயணன்தலைமை வகித்தார். செயலாளர் இராமச்சந்திரன் வகுப்பு விகிதாசாரமுறை வேண்டும் என்று தீர்மானங் கொணர்ந்து, மந்திரி மாதவமேனன் தமதுமுயற்சியில் வெற்றிபெற எல்லாவகையான நடவடிக்கைகளும் எடுக்கும்படியும் கேட்டுக்கொண்டார். எல்லோரும் ஆதரித்தனர்.

✻

## நடக்க இருப்பவை

காஞ்சி: பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி பழைய மாணவர் நாள்20—8—50 அன்று மேற்படி பள்ளியில் நடைபெறும். திரு. சி.என். அண்ணாதுரை தலைமை தாங்குவார். தோழியர் சரோஜினி B.Sc பேசுவார்.

பெரியகுளம்: 20—8—50 அன்று தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி ஆகியோர், சொற்பொழிவாற்றுவர்.

ஓமலூர் 21—8—50ல் தோழர் எஸ். ஆர். அர்த்தநாரி தலைமையில் தோழர் இ. ரா. நெடுஞ்செழியன் M A. பேசுவார்.

# கம்யூனல் ஜீ. ஓ-திராவிடர் தீர்ப்பு

# பல கட்சியினர் போரணி

## மாணவர்கள் திரண்டெழுந்தனர்

## நாடெங்கும் கிளர்ச்சி

இந்த வாரம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஆதரித்து நடத்திய கூட்டங்கள், ஊர்வலங்கள், கடையடைப்புகள், பள்ளி செல்ல மறுப்புகள் பற்றிய செய்திகள் தினந் தினம் வந்து குவிந்த வண்ணமே உள்ளன.

திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்கள் அங்கங்கே, பிறகட்சித் தோழர்களுடன் இணைந்தும் தனித்தும் வெகு மும்முரமாக வேலை செய்திருக்கின்றனர்.

நீள ஊர்வலங்களை நடத்திக் காட்டியிருக்கின்றனர். காரசாரமாக பேசியிருக்கின்றனர்' பொதுக் கூட்டங்களில்! 'வகுப்பு விகிதாச்சார முறை வாழ்க' சமூக நீதி ஓங்குக' 'இந்திய சட்டத்தைத் திருத்துக' என்றெல்லாம் எதிரிகள் செவிகள் அதிர அதிர முழங்கியிருக்கின்றனர். அடுத்து நடக்க வேண்டியன யாவையெனத் தெளிவாகத் தீர்மானங்கள் மூலம் தெரிவித்திருக்கின்றனர்.

செய்திகள் ஏராளம்—அவற்றில் சில, கீழே தரப்பட்டுள்ளன :—

### மதுரை மாணவர் தீர்ப்பு

மதுரை மறுமலர்ச்சி மன்றக் கட்டிடத்தில் 3—8—50 அன்று காலை 9-மணிக்குத் திராவிட இயக்க மாணவர்கள் பெருவாரியாகக் கூடினர். தோழர் பிச்சை தலைமை வகித்தார். பல தோழர்கள் பேசினர். சிறுபாலாரின் நன்மையைக்கருதி, நீதிக்கட்சியார் பெரும்பான்மை சமூகமான பார்ப்பனரல்லாதரார் முன்னேற ஊன்றுகோலாகத் தந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அழிக்கப்படக் கூடாது என்றும், சென்னை அரசாங்கம் எல்லா வகையான முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றினர்.

### திருவண்ணாமலையிலே

9—8—50 ஐந்துமணிக்குப் பள்ளி மாணவர்கள் 500 பேர்களுக்குமேல், 'வகுப்பு நீதி வழங்கு' 'வகுப்புவிகிதாசார முறை வேண்டும்' என்று ஒலித்த வண்ணம், நகரின் பிரதான தெருக்களின் வழியாகஊர்வலம்வந்தனர். மாலை 6-30மணிக்குத் தோழர் தர்மலிங்கம் தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கிற்று. ஊரின் பெரும் வியாபாரிகள், தொழிலாளர்கள், பிரமுகர்கள், பெண்கள் ஏராளம் கலந்து கொண்டனர். பல்வேறு கருத்துடையோரும் அன்றைய பேச்சு மேடையை அலங்கரித்தனர். பின்னணி சமுகத்திற்கு உறுதுணையாக நிற்பது வகுப்பு விகிதாசார முறையென்பதை ஒவ்வொருவரும் வலியுறுத்தினர். தோழர்கள் வரதராசன், ராமதாஸ், மாரிமுத்து, அண்ணாமலை, திருஞானம், ரங்கசாமி, ப. உ. சண்முகம் ஆகியோர் பேசினர். அன்று திருவண்ணாமலை திராவிட சமுதாயம், தங்கள் இன முன்னேற்றத்திற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்தும் தேவையென்பதை உணர்ந்து கொண்டனர்—தீயர்களின் தந்திரத்தை அறிந்து கொண்டனர்.

### மாணவச் சிங்கங்கள்

சிவகங்கை அரசர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரி மாணவர்கள் 10—8—50 அன்று கல்லூரிகளில் மாணவர் சேர்ப்பதில கம்யூனல் ஜி. ஓ. அமுலில் இருந்தே தீரவேண்டும் என்று வற்புறுத்த, கல்லூரிக்குச் செல்லவில்லை.

கம்யூனல் ஜி. ஓ. வேண்டும் என்று கல்லூரி கட்டிடமே அதிரும்படி முழங்கினர். கல்லூரி பிரின்ஸ்பால் வகுப்பு நீதியைப்பற்றி அரைமணிக்கு மேலாக விளக்கவுரை தந்து, 'ஸ்ட்ரைக்' செய்தது போதும், இனி வகுப்புகளுக்குச் செல்லுங்கள் என்று வேண்டியும், முழுநாள் வேலைநிறுத்தம் செய்யப்போகிறோம் என்று கண்டிப்பாகக் கூறி விட்டனர் மாணவச் சிங்கங்கள்! பிறகு நடந்த மாணவர் கூட்டத்தில், உயர்நீதி மன்றத் தீர்ப்புக் கண்டு மாணவர்கள் மனவேதனையடைந்த போதிலும் சுப்ரீம் கோர்ட்டிற்குச்சென்னை அரசியலாரின் அப்பீல் செய்யும் முடிவை ஆதரிக்கிறோம், அங்கேயும் நல்ல தீர்ப்புக் கிடைக்காவிட்டால், அதற்கு மேலுந் தொடர்ந்து காரியங்கள் செய்யத் தவறக்கூடாது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, சென்னைப் பிரதமருக்கு அனுப்பப் பட்டன.

### கோவையிலே, குமுறல்!

கோவை நகர மாணவர்கள் குமுறும் எரிமலைகளாகத் திரிந்தனர், 11—8—50 அன்று முழுவதும்! கோவை ஆர். எஸ். புரம் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், பகல் 2 மணிக்குப் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் வந்தனர். தேவாங்கபேட்டை உயர்நிலைப் பள்ளியை அடைந்தனர். மாணவர்கள் பலர் ஊர்வலத்தில் கலந்துகொள்ளத்துடித்தும், நிர்வாகிகளின் கண்டிப்பான போக்கால் அவர்கள் வர முடியவில்லை. பிறகு ஊர்வலம் கோராகத் தெப்பக்குளம் மைதானத்திற்கு வந்தது. அங்கு ஏற்கனவே கூடியிருந்த பல்வேறு பள்ளிகளின் மாணவர்களையும் அழைத்துக்கொண்டு கல்லூரி கட்டிடத்தை அடைந்தனர். கல்லூரி மாணவர்கள், தங்கள் கல்லூரிக் கழக விழாக்கள் இருப்பதால் திங்கட்கிழமை வேலை நிறுத்தம் செய்வதாகக் கூறியதன் பேரில் ஊர்வலம் மேலும் நகர்ந்தது. மாலை 5 மணிக்கு ஊர்வலத்தினர் டவுன்ஹால் மைதானத்தில் கூடினர். மாணவத் தோழர் சி. டி. தண்டபாணி தலைமை வகித்தார். செழியன், ஆறுமுகம், இளங்கோவன், முத்துக் குமாரசாமி, பி. வி. நடராசன் பேசினர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை பிறந்து வளர்ந்த வரலாற்றையும், அதனால் பிற்பட்ட சமூகத்தார் அடைந்த நன்மைகளையும் எடுத்து விளக்கினர். உயர்நீதி மன்றத் தீர்ப்புக் கண்டு வருந்துவதாகவும், மக்கள் எண்ணிக்கைப்படியே இனி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமைக்கப்பட வேண்டும் என்றும், இந்திய அரசியல் சட்டம் இதற்கு மாறாக இருக்குமானால் தேவையான திருத்தங்களைச் செய்யவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கல்லூரிக் காளைகள்

நகர மக்களிடையே, பெரியதொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திவிட்டார்கள் மாணவமணிகள்—உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் நடத்திய பெரும் ஊர்வலமும், 14—8—50ல் கல்லூரி மாணவர்கள் நடத்திய ஊர்வலமும் கோவை மக்களிடையே ஒரு பரபரப்பையே உண்டாக்கி விட்டது. கல்லூரியிலிருந்து காலை 10 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம், மைக்கேல்ஸ் உயர்நிலைப் பள்ளி, சிடி முனிசிபல் உயர்நிலைப்பள்ளி, யூனியன் உயர்நிலைப் பள்ளி மாணவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு, போஸ்டாபீஸ் ரோடு, அவினாசி ரோடு, சர்க்கார் அலுவலக ரோடு வழியாகச் சென்று கல்லூரிக்குப் பின்புறமுள்ள பார்க்கில் கூடினர். அ. ச. நடராசன், பி. காம்., வகுப்பு விகிதாசார முறையைப் பற்றி விளக்கமாகப் பேசினர். தேவையான தீர்மானங்களை நிறைவேற்றினர். ஊர்வல அமைப்பாளர்கள் சென்னியப்பன், பி. சிங்காரம் இருவரும் நன்றி கூறினர்.

### விசுவகர்மத் தொழிலாளரிடையே

குளித்தலையில் 13—8—50-ல் கூடிய விசுவகர்மத் தொழிலாளர்கள் கூட்டத்திற்கு, ஜில்லா போர்டு அங்கத்தினர் ஆர். கோவிந்தன் தலைமை வகித்தார். செயலாளர் சி. பிச்சைமூர்த்தி வகுப்பு நீதியின் அவசியங்குறித்து வெகுநேரம் பேசினார். ஆதிகாலந்தொட்டே வகுப்புவாதப் பார்ப்பனீயத்தின் வெறியாட்டத்தை அசுர விசுவகர்ம சமூகம் பாடுபட்டிருக்கிறது, ஆனால் தென்னாட்டில் அவர்களின் ஆதிக்கம் இன்னமும் அடங்கவில்லை, வகுப்பு வெறியை ஒழிக்க எல்லோரும் சேர்ந்து செய்யும் கிளர்ச்சியில் இந்தச் சமூகம் முழுப்பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தாரமங்கலத்தில்

13—8—50 அன்று இரவு 7 மணிக்கு கே. அழகானந்தம் தலைமையில் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும்' 'இந்திய அரசியல் திட்டத்தைத் திருத்துக' என்று எழுதப்பட்ட அட்டைகளைத்தாங்கி ஊர்வலம் சென்றனர். பிறகு தண்டிகேஸ்வரம்பாளையச் சாவடியில் சந்திரசேகரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமுறையை ஆதரித்துத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பார்ப்பனமாணவர் பங்கு

அறந்தாங்கி கழக உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 14—8—50 காலை 10-மணிக்கு கோட்டைப்பந்தடித்திடலிலிருந்து இரா. சேக்முகமது தலைமையில் ஊர்வலமாகக் கிளம்பி, ஊரின் முக்கிய பகுதிகளில் சுற்றினர். பார்ப்பன மாணவர்களும் ஊர்வலத்தில் பங்கெடுத்துக்கொண்டது குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சி—அவர்கள் பள்ளிக்குப்போகாமலிருந்ததோடு, ஊர்வலத்தின் வெற்றிக்கு ஒத்துழைத்தார்கள். பொதுமக்களும்,மலர் மாலைகள் அணிவித்து மாணவர்களை உற்சாகப் படுத்தினர்.

### இஸ்லாமியக் கல்லூரி

உரிமைப் போருக்கு ஆயத்தமாகிவிட்டோம் என்று கூறுவதுபோல, வாணியம்பாடி இஸ்லாமியக்கல்லூரி மாணவர்கள் 14—8—50 அன்று அணிவகுத்து நின்றனர். நகர இந்து, இஸ்லாமிய உயர்நிலைப்பள்ளிகளின் மாணவர் படைகளும் ஒன்றுசேர சுமார் 1000 பேர்கள் கொண்ட அணி வகுப்பு முக்கிய வீதிகளை கடந்து சந்தைப்பேட்டையை அடைந்தது மாணவத்தோழர் ஜெயராம் தலைமை வகித்தார். கல்லூரி மாணவர்கள் குஞ்சிதபாதம், குத்தூசு, இப்ராஹிம், ஹமீது, பார்த்தசாரதி ஆகியோர் தமிழ், ஆங்கிலம், உருதுவில் பேசினர். உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்கள் செல்வராசு, நடராசன் பிறரும் தொடர்ந்து பேசினர். தன. இராமச்சந்திரன் "வகுப்புவாரிமுறை வேண்டும் அதற்கேற்ப அரசியல் அமைப்பைத் திருத்துக" என்ற தீர்மானத்தைக்கொண்டு வந்தார். மாரிமுத்து நன்றி கூறினர்.

### பெரியார் தலைமையில்

சென்னையில் 14-8—50ல் நடந்த மாபெரும் ஊர்வலம், சமூக நீதிக்கு மக்களிடத்து எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக இருந்தது. சென்னையின் பல்வேறு பகுதிகளிலே மக்கள் கூடி அங்கங்கே ஊர்வலங்கள் நடத்தினர். 'சமூகநீதி தேவை' 'வகுப்பு விகிதசார முறை வேண்டும்' 'இந்திய சட்டத்தைத் திருத்து' என்ற அட்டைகளைத் தாங்கியும், கோஷங்களிட்டும் தங்கள் எண்ணத்தை எடுத்து விளக்கினர்.

அன்றைய முக்கிய ஊர்வலம், பிராட்வேயிலிருந்து புறப்பட்டது. இதற்குப்பெரியார் தலைமை வகித்தார். ஆயிரக் கணக்கிலே மக்கள் இதில் கலந்துகொண்டனர். ராபின்சன் பார்க்கிலிருந்து வேறொரு ஊர்வலம் புறப்பட்டு, வண்ணாரப் பேட்டையை அடைந்து அங்கு சேனியம்மன் கோயில் முனையிலிருந்தும், திருவொற்றியூர் ரோட்டிலிருந்தும் வந்துகொண்டிருந்த இரு ஊர்வலங்களையும் அழைத்துக்கொண்டுபிராட்வே வழியாகச் சென்று கொண்டிருந்த முக்கிய ஊர்வலத்தோடு கலந்துகொண்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

# பிரிவினை யுணர்ச்சி மங்காது—வளரும்!

## மாகாண—மத்திய தகராறு உருவாகியே தீரும்!

### அறிகுறிக் காட்சிகள் காணீர்!

"விற்பனை வரியின் மூலம் வரும் தொகையைக் குறைய அனுமதியோம். இந்த விஷயத்தில் மத்திய சர்க்காரின் சிறு குறுக்கீட்டையும் எதிர்த்து நிற்போம்.

சென்னை சர்க்கார், விற்பனை வரி விதிப்பில் மத்திய ஆட்சி தலையிடுமானால் தடுத்து நிறுத்தத் தயங்காது.

விற்பனை வரி விவகாரத்தில் இந்திய அரசாங்கம் தலையிடுவதை சென்னை சர்க்கார் விரும்பவில்லை.

இந்த விஷயத்தில் தீவிரமாகவே இருப்பேன்."

பேசியவர், நிதிமந்திரி கோபால் ரெட்டியார்! ஆம், அவர் ஆத்திரத்தோடுதான் இந்த வார்த்தைகளை வீசியிருக்கிறார். கோபாலரின் கோபம் அவர் மனதிலே பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டது. பொங்கி வழியும் உணர்ச்சியிலே அவர் இந்த வார்த்தைகளைக் கொட்டிவிட்டார், தன்னிலை மறந்து—அவர் வார்த்தைகளில் அனலின் வாடையடிக்கிறது!

நிதி மந்திரியாருக்கு நன்றாகத் தெரியும், தான் 'உறுப்பு' ராஜ்யத்தின் பொறுப்புள்ள மந்திரியென்று! இருந்தும் மத்திய சர்க்காரை எதிர்ப்போம் என்று துணிந்து கூறிவிட்டார். நாம் பலமுறை இந்த நிலை பிறக்கும் என்று எடுத்துரைத்த பொழுதெல்லாம் ஏளனம் செய்தோர், குற்றங் கண்டு பிடிப்பதையே குணமாகக் கொண்ட குறைமதியினர் என்று கூறியவர்கள், விதண்டாவாதிகள் என்று வெறுப்புரை வீசியவர்கள், கேலி பேசினவர்கள், கிண்டல் புரிந்தோர் — அத்தனை பேரும் சிந்திக்கவேண்டும். பேசியவர் காங்கிரஸ் மந்திரி கோபாலர்—சாமான்யரல்ல!

டெல்லியிலே, நிதிமந்திரி தேஷ்முக்கை சிலர் சில கேள்விகளைக் கேட்டனர்—அவர் தந்த விடைகளை பத்திரிகையில் பார்த்தவுடனேயே கோபாலர் கொதிக்கும் நெருப்பானார் — கொந்தளிக்கும் கடலானார்—கொடியபுயலாகிவிட்டார்.

டெல்லி தொடர்பை அறுத்தெறியும் நாளே, திராவிடர் தம் திருநாளென்று சொல்லி வருகிறோம் பல நாளாய் — ஆனால் அவர்கள் ஏற்க மறுத்து விட்டனர் நம் வார்த்தைகளை! பொறுத்திருந்தோம், அவர்கள் இன்றில்லாவிட்டால் நாளை உணர்வார்கள், நிலைமை அவர்களை உண்மையுணர்வோராக மாற்றும் என்ற நம்பிக்கையோடு! காத்திருந்ததால், காரியம் கெட்டுவிடவில்லை நாம் பேசியதைவிடத் தீவிரமாகக் காங்கிரஸ் மந்திரியாரையே பேச வைத்திருக்கிறோம்.

இன்றைய அரசாங்க நிதி நிலையைப் பாதுகாப்பது விற்பனை வரி—அதுவும் மதுவிலக்கால் ஏற்பட்ட இழப்பிற்குப்பின், சென்னை அரசாங்கம், நம்பியிருப்பது இந்த வரியைத்தான்!

இந்த வரியைப் பற்றி மத்திய பார்லிமெண்டில் நடந்த விவாதம்தான் கோபத்தைக் கிளறுகிறது. தேஷ்முக் தெரிவித்து விட்டார், விற்பனை வரி விதிப்புச்சட்டம் இன்னும் ஓராண்டில் முழுவதும் அமுலுக்கு வந்துவிடும் என்று! அடுத்த கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில், மத்திய வரியாகவோ, ஒரே விதமாகவோ விற்பனை வரியைச் செய்ய 1948-ல் யோசிக்கப்பட்டது, ஆனால் முடிவாக அது வேண்டாமென்றே கைவிடப்பட்டது என்று கூறினர். இந்த விற்பனை வரி விவகாரத்தில் உதவியளிக்கும் சட்டம் 286-பிரிவாகும். தனிராஜ்யத்தின் சட்டம் ஒரு பொருளின் விற்பனையிலோ வாங்குவதிலோ வரி விதிக்க முனையக் கூடாது என்று கூறுகிறது!

இந்த வாதத்தினைக் கேட்ட கோபாலர், மத்திய அரசாங்கம் குறுக்கிட்டால் முழுமூச்சோடு எதிர்ப்போம் என்றே கூறிவிட்டார். இந்த நிலை நாம் எதிர்பார்க்காதது அல்ல—ஆகவே ஆச்சரியப்படவில்லை! நம் பேச்சைத் துச்சமெனத் தள்ளிவிட்டுத் தம் இச்சைபோன போக்கில் நம்மைத் தாக்கியவர்கள் இப்பொழுது உணர்வர்.

விற்பனை வரியிலே மட்டுமல்ல, இந்த வேற்றுமை, இன்னும் பல பல பிரச்சினைகளில் கசப்பு வளர்ந்து கொண்டுதான் வருகிறது. வடநாடு, தென்னாடு என்ற பேசிடுவோர் எண்ணிக்கையில் வளர்ந்துகொண்டே வருகின்றனர். வடநாட்டு ஆதிக்கம் பெருகுகிறது என்று ஆவேசக்குரல் நமது கூடாரத்தில் மட்டுமல்ல, நாம் எதிர்பார்க்காத இடத்திலிருந்து மட்டுமலல, ஏற்படக்கூடாத முகாமிலிருந்தே கேட்கிறது!

கட்டாய இந்தியை, எடுத்துவிட்டனர் காங்கிரஸ் சர்க்கார், சென்னை ராஜ்யத்தில்! இதனைக் கேட்ட வடநாடு சீறிப்படமாடும் நாகமாகிவிட்டது. இந்தி, இந்தியாவின் தேசிய மொழியென்று தீர்மானித்துள்ளனர். அதற்கு ஆதரவு திரட்டும் வேலையிலே அவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த நேரத்தில் கட்டாய இந்தி வேண்டாம் என்று தென்னாட்டில் தீர்ப்பு தந்து விட்டனர் என்றால் அவர்கள் திகைக்காமல் என்ன செய்வர்? வடநாடு—தென்னாடு பிளவு பெரிதாகிறது—வேற்றுமை விரிகிறது—பேதம் பெரிதாகிறது!

இந்தி மொழியைக் கட்டாயமாகத் திணிப்பதால் ஏற்படும் தீமைகளை நாம் எடுத்துச் சொன்னோம்—நாட்டில் உள்ள அறிஞர்கள் அனைவரையும் ஒருமுகமாகக் காட்டி இந்தியின் வரவால் ஏற்படும் இன்னல்களை விளக்கினோம் — கேளாக் காதர்களாகவே இருந்தனர். போரிட்டோம் நாம், அப்பொழுதும் புரிந்துகொள்ளவில்லை. நம் அறப்போர் அவர்களின் அறிவுக் கண்களைத் திறக்க முயற்சி செய்தது — பிடிவாதத்தால் பித்தனைப் போலக் குதித்து நம்மைத் தூற்றினர்—அடக்குமுறைகளால் தாக்கினர்—ஆணவச் சிறையில தள்ளி வதைத்தனர். கடைசியில் நாட்டின் நிலையுணர்ந்து, தாயகத்தின் தன்மையைப் புரிந்து கட்டாய இந்தி கூடாது என்று கூறிவிட்டனர். களித்தோம் நாம்—கடமையை உணர்ந்த ஆளவந்தாரை வாழ்த்தினோம், பாராட்டினோம்.

ஆனால், வடநாடு இதனைக் கண்டு வெகுண்டது. விஷத்தைக் கக்கப் போகிறது ஒரு நாள் என்பது மட்டும் உறுதி!

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ வழக்கிலும், வகுப்பு வாதிகள் வெற்றிபெற்றுவிட்டனர். சர்க்கார், இந்த வெற்றி கண்டு ஓய்ந்துவிடவில்லை. சுப்ரீம் கோர்ட்டுக்கு போகத் தீர்மானித்துவிட்டது. பாராட்டிற்குரிய செய்தி! மந்திரி மாதவமேனன், துணிவாகச் சொல்லிவிட்டார், சுப்ரீம் கோர்ட்டில் தோல்வி கண்டாலும், இந்திய சட்டத்திலே கூடத் திருத்தங் கொணரவும் முனைவோம் என்று!

திராவிட நாடு பிரியவேண்டும் என்று நாம் பேசிடும் பொழுதெல்லாம், இந்தச்சட்ட சிக்கல்களை மட்டுமல்ல, சமுதாய சங்கடங்கள், பண்பு பழக்க வழக்க குழப்பங்கள், கலாசாரக் கோளாறுகள், இனத் தகராறுகள் இன்னும் பலவற்றை எடுத்துக்காட்டி வாதாடுகிறோம். அப்பொழுதெல்லாம் நம்மீது சீறினர்கள். ஆனால் இப்பொழுது நிதி மந்திரி கோபாலர் நெருப்பு மலையாகிறார். விற்பனை வரியிலே மத்திய சர்க்கார் குறுக்கிடுதல் கூடாது, தலையிட்டால் வீண் தகராறுதான் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார.

பிரிவினை உணர்ச்சியின் அரும்பு நிலை இது—எனினும் இது மலர்ந்து புரட்சி மணம் வீசப் போகிறது என்பது உறுதி!

நாட்டிற்கு நல்வாழ்வு தேவையென்பதே நமது இயக்கத்தின் இதய கீதம்—நாம்தான் இதனை முடித்தோம் என்று பெருமை பேசிடுவது கூடாது என்று கருதுபவர்கள் நாம்! நாட்டு மக்களுக்கு சுகம் வேண்டும், அதற்கான சூழ்நிலையைச் சிருஷ்டிக்க வேண்டும் என்பதே நம எண்ணம். கட்சி மாச்சரியத்திலே கருத்தைச் செலுத்தி, காரியத்திலே சோரம் போவதைக் கண்டித்து வருகிறோம், பல நாட்களாக!

வகுப்பு விகிதாச்சாரக் கிளர்ச்சியில் மட்டுமல்ல, வரப்போகிற பெரும் போராட்டத்திலே கூட, பெருமை, பிரதாபம், பொய் கௌரவத்திற்குப் பலியாகாமல் இலட்சிய வெற்றியிலே நாட்டங் கொண்டு காத்திருந்தோம். இதோ கோபாலர் கொதித்தெழுந்து பேசுகிறார், வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து! நம் எதிர்காலப் பாதையிலே நம்பிக்கை நட்சத்திரத்தின் ஒளி தெரிகிறது—இனத்திற்கொரு இடம், வர்க்கத்திற்கொரு வட்டாரம் என்று நாம் முழக்கிய இலட்சிய கீதம் எங்கெங்கும் எதிரொலிக்கிறது கண்டு பெரு மகிழ்வு கொள்கிறோம்.

திராவிடநாடு தனித்து வாழ்ந்தால்தான் இனம் இன்பமாக வாழும், கலையின் நிலை உயரும், பண்பும் பழக்கமும் செழித்தோங்கும் என்றோம். இந்தியா ஒரே நாடு, பிரிவு கூடாது, என்று பேசியவர்களே இன்று வடநாட்டை எதிர்க்கும் படைக்கு முன்னணி வீரராக வரும் காட்சியைக் காண்கிறோம். வடநாட்டின் வருத்தத்தையும் பொருட்படுத்தாது, எதிர்த்துரைக்குமே என்ற கவலையுமின்றி கட்டாய இந்தி கூடாது, தாய்மொழிதான் தலைமை வகிக்கவேண்டும் என்று கூறிய மாதவமேனன்—வகுப்புரிமைக்குத் தீமை விளைத்தால் இந்திய சட்டத்திலேயே கூட திருத்தம் கொண்டுவருவோம் என்று துணிந்து கூறிய மாதவமேனன்—நம்மை மகிழச் செய்கிறார்.

X X X

இந்தியா ஒரு பெரிய உபகண்டம்—இங்குள்ள மாகாணங்கள் சிறுநாடுகள்போன்றவை. எனவே இவைகள் எல்லாவற்றையும் தமது கைப்பிடிக்குள்ளடக்கி ஆள்வது இயலாது. எல்லா மாகாணங்களையும் சரி சமமான நிலையில் பாவிக்கும் மன நிலையும் மத்திய சர்க்காரின் பீடத்தில் அமர்ந்திருப்போருக்கு ஏற்பட இயலாது. அதிலும் தென்னாடு என்றாலே பொதுவாகத் தப்பெண்ணமும் விரோத நோக்கமும் டெல்லி வட்டாரத்தில் சிருஷ்டியாகிக் கொண்டுவருகிறது என்றெல்லாம் நாம் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். நாம் கூறுவது விதண்டாவாதமல்ல! இதை நிரூபிக்கவே இப்போது கண்ணுக்கெதிரே காட்சிகள் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன!

வரி விதிப்பில் தலையிடுவது கூடாது
மொழி உத்திரவை ஏற்க மறுப்பு
வகுப்பு நீதிக்காகப் போர்

இத்தகையப் பிரச்னைகள் உருவாகியிருக்கின்றன—அதிருப்தியை அதிகமாக்கும் வகையில். இது மட்டுமல்ல, இதற்கு முன்னர் ஆரம்பித்து இன்னும் முடியாத நிலையிலும் பல அதிருப்திக் காட்சிகள் இருந்துகொண்டே இருக்கின்றன.

கடன் கோரி மூக்குடைபட்ட படலம்
அரிசி கோரி, கோடி ரூபாய் கொட்டி
அழுத படலம்.

போன்ற, பல அவமானப் படலங்கள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. ஆயினும் அப்போதைக்கப்போது, இங்குள்ளோர், வடநாட்டுப் பிணைப்பு காரணமாகத் தங்கள் அவமானத்தைத் திரைபோட்டு மூடிக்கொண்டாலும், அடிக்கடி எழும்பித் தீரும் அதை வலியுறுத்தும் காட்சிகள் தான் மேலே நாம் குறிப்பிட்டவை.

வடநாடு — தென்னாடு என்ற உணர்ச்சி வலுத்து வருகிறது. ஒவ்வொரு பிரச்சினையிலும், இந்த எண்ணம் பரவியிருக்கிறது. மந்திரி சபையிலேகூட நமது எதிர்காலப் போராட்டத்திற்கு வீரர்கள் உருவாகிறார்கள்.

பிரிவினைப் போருக்கு, நாம் எதிர்ப்பார்க்காத இடங்களிலிருந்தெல்லாம் தளபதிகள் கிடைப்பார்கள்—கோபாலர்மட்டுமல்ல, மாதவனார்மட்டுமல்ல, மந்திரிசபையே அந்தப்போரின் பாசறையாகும்!

விற்பனைவரிமட்டுமல்ல, இன்று கற்பனை செய்யமுடியாத புதுப் புதுப் பிரச்னைகளிலிருந்தெல்லாம் புகைய ஆரம்பிக்கப்போகிறது, அது பெருந்தீயாக மாறப்போகிறது.

தென்னாட்டு விடுதலை விளக்கை ஏற்றிவைத்தோம் நாம்—அதனைத் தூண்டாமணிவிளக்காக்கி முனைகின்றனர், நம்மை எதிர்த்த முகாமிலிருந்தே — அவர்கள் சாமான்யர்களல்ல, 'கனம்'கள்! நாம் எதிர்பார்த்தசம்பவம், மிகவிரைவிலே நடந்து வருகிறது!

*

# கழகச் செய்திகள்

—❀—

திருநெல்வேலி

23—7—50-ல் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் ச. வீரபாகு தலைமையில் கூடி, சென்ற துவக்கவிழாப் பொதுக்கூட்ட நிகழ்ச்சி விவரமும், வரவு, செலவும் கூட்டப்பெற்று, வசூலான தொகை ரூ 115-ம், செலவானது ரூ. 123—10—0, அதிகச் செலவான ரூ 8-10-0 வரவேண்டிய 20—8—0 விருந்து ஈடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது

ஆசைத்தம்பிக்கு அரசாங்கம் கொடுத்த தண்டனையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

புதுப்பேட்டை (சென்னை)

12—7—50-ல் நடந்த தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டத்தில் 13—7—50-லிருந்து தற்காலிகமாகக் கழக இடமாக, 20, சியாலி முதலித் தெருவிலுள்ள இல்லம் ஏற்பாடு செய்யபபட்டுள்ளது.

மேலப்பழுவூர்

23—7—50-ல் தி. மு. கழகச் சார்பில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

மங்கநல்லூர்

30—7—50-ல் நடந்த தி. மு. க. செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் விளம்பர உறுப்பினராகப் பணியாற்றிய நா. முத்தையன் விலகியதை ஏற்று எ. எம். உசேனைத் தெரிந்தெடுக்கப் பட்டது. செப்டம்பரில் ஆண்டு விழா நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

திருவனந்தபுரம்

30—7—50-ல் தி. மு. க. சார்பில் திருக்குறள் வாசகசாலையை நல்லசிவம் திறந்துவைத்தார். சண்முகசுந்தரம், சா. வீ. மு. நம்பி, கே. எஸ். மணி, ஏ. சிதம்பரம், ஏ. கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

திருமால்பூர்

26—7—50-ல் திருமால்பூர் தி. மு. க. சார்பாக பொன்னியம்மன் கோவிலருகில் அந்தாசிவம் அவர்கள் தலைமையில், கட்டாய இந்தி ஒழிந்த களிப்புக் கூட்டம் நடந்தது. செயராமன், ஆடியபாதம், குமாரசாமி ஆகியோர் பேசினர்.

ஆலமரத்துப்பட்டி

7—8—50-ல் நடந்த தி. மு. க. நிர்வாகக் குழுக் கூட்டத்தில், ஆசைத்தம்பி வழக்கில் நீதி கோரியும், வகுப்பு விகிதாசார முறை நீடிக்க வேண்டிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரிநாயகிபுரம்

9—8—50ல் ஆறுமுகனார் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் செல்லையா, திராவிடமணி ஆகியோர் சமூக சீர்திருத்தம் குறித்துப் பேசினர்.

**பெத்த நாடார்பட்டி**

29—7—50ல் பாண்டியன் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் பாலகுருசாமி, தங்கத்துரை, சூசை மரியாள், கஜேந்திரன், திராவிடமணி முதலியோர் பேசினர். நெல்லை மாவட்டக் கழகத்திற்கு தங்கத்துரை, களஞ்சியம் உறுப்பினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

**பட்டமுடையார் புரம்**

30—7—50ல் தவசுமுத்து அவர்கள் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் மாணவர் செல்லையா, நா. முத்து, திராவிடமணி பேசினர்.

31—7—50ல் நடந்த மேற்படிக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் நெல்லை மாவட்டக் கழக உறுப்பினர்களாக சந்தானம், இளங்கோ தெரிந்தெடுக்கப்பட்டனர்.

**விருத்தாசலம்**

2—8—50 மாலை 5-மணிக்கு வானொலித் திடலில் பழனிக்கண்ணு தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் ராமசாமி, பழமலை, கேசவன் ஆகியோர் கம்யூனல் ஜி. ஓ. வின் அவசியம்பற்றி விரிவாகப் பேசினர்.

**விளந்தை** (தெ. ஆ. மா.)

5—8—50ல் வி. டி. ஆறுமுகம் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் எஸ். நெடுமாறன், சி. பி. சிற்றரசு பேசினர். சிறு கிராமமாக இருந்தும் ஆயிரக் கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர். கூட்டத்திலிருந்த அம்பலவாணனார் பூணூல் இழிவுச் சின்னமென்றுணர்ந்து அறுத்தெறிந்தது குறிப்பிடத் தக்கது.

# புதுக் கழகங்கள்

———

நல்லூர்

31—7—50-ல் தென்காசி தாலுகா, நல்லூரில் தி. மு. க. புதிதாக அமைக்கப்பட்டு, செயற்குழுவினர் தெரிந்தெடுக்கப் பெற்றனர். பொதுச் செயலாளர்—சாமுவேல், துணைச் செயலாளர்கள்—சண்முகம், செல்லையா, நிதி உறுப்பினர்—சி. குழந்தைவேல், விளம்பர உறுப்பினர்—டி. என். தாமஸ், வை. அருணாசலம், வள்ளிநாயகம், ஜோதிலால், ஆறுமுகம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்கள்.

கண்டியூர்

20—7—50-ல் கண்டியூர் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பெற்றது. பொதுச் செயலாளர், பொருள் உறுப்பினர்—மு. அலாவுதீன், துணைச் செயலாளர்—ப. நலலய்யன், விளம்பர உறுப்பினர் — எம் ஆர். கோவிந்தராசு, இராசகோபாலன், சேக் இபுராகிம், சண்முகம், சீராப்ஜான், மஜீ மைதீன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்கள்.

புஞ்சைத் தலையூர்

3—8—50ல் மாலை 4-மணிக்கு நல்லமுத்து தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் நடந்தது. பொதுச் செயலாளர்:—பெரியசாமி, துணைச்செயலாளர்:- கே எஸ். நாச்சிமுத்து, பொருள் உறுப்பினர்:- கே. குமாரசாமி, விளம்பர உறுப்பினர்:- கே. நயினாமுகம்மது, மற்ற உறுப்பினர்கள்:— கே. எஸ். அய்யாச்சாமி, பெரியசாமி, நல்லசாமி, இராமசாமி, எம். பி. இராமசாமி அப்துல்வகாப், எஸ். பெரியசாமி.

## மாணவர் கழகங்கள்

வேலூர்

4—8—50ல் முன்னேற்றக் கழக ஆர்வமிக்க மாணவர்கள் கூடி திராவிட முன்னேற்ற மாணவர்க் கழகம் நிறுவினர். தலைவர்:- லெனின், துணைத்தலைவர்:- குப்புசாமி, பொருளாளர்:- வெங்கிடகிருஷ்ணன். இந்திஒழிப்பினைச் செய்த அரசியலாரைப் பாராட்டியும், ஆசைத்தம்பி வழக்கில் நீதிவேண்டியும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நீடிக்க சர்க்கார் எல்லா வகையான முயற்சிகளையும் செய்யவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சோழவந்தான்

4—8—50ல் இராக்கன் தலைமையில் நடந்த அமைப்புக் கூட்டத்தில செயற் குழுவினர் தெரிந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:- சிவலிங்கம், துணைச்செயலாளர்:- சண்முகம், பொருள் காப்பாளர்:- இரத்தினவேலு, விளம்பர உறுப்பினர்:- நாராயணன், மற்ற உறுப்பினர்கள்:- பாலகிருட்டினன், செல்லமணி, கந்தசாமி, முருகன், பாண்டுரங்கன், வெள்ளைச்சாமி, சுப்பையா, நடராசன்.

## பொன்மலை கழக வழக்கு

பொன்மலை திராவிட வாலிபர் கழகத்திற்கு சில சுயநலமிகள் கொடுத்த தொந்திரவின் காரணமாக ஏற்பட்ட இ. பி. கோ. 145 வழக்கு இன்று பட்டவார்த் தலைகாம்பயில் திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் நடைபெற்றது. நம்தரப்பில் திருச்சி வைத்திலிங்கம் B A, B.L. வக்கீலாக ஆஜரானார். எதிர்தரப்பில் இரண்டு பேர்களை விசாரித்தபிறகு 28—8-50-க்கு வழக்கு ஒத்தி போடப்பட்டிருக்கிறது. என்று கழக செயலாளர் ஏ. கோவிந்தசாமி தெரிவிக்கிறார்.

## திராவிடர் புரட்சிப் படிப்பகம்

கோள்ளுபபட்டி

30—7—50-ல் எம். கே. அன்பழகன் தலைமையில் பயிற்சிக்கூட்டம் நடந்தது. க. நெடுஞ்செழியன், அந்தோனிமுத்து, தேவதாசன், முன்னர்மன்னன், பெருமாள், ஐயப்பா, செல்லையா ஆகியோர் பேசினர்.

## மறுமலர்ச்சிக் கழகம்

மதுரை

3—8—50-ல் நடந்த செயற்குழுக் கூட்டத்தில், நீதிக்கட்சி ஆட்சியின்போது பிற்பட்ட சமூகத்தின் நலன் கருதிக்கொண்டு வந்து இன்று வரை அமுலிலிருந்த வகுப்பு விகிதாசாரமுறை இன்னும் நீடிக்கவேண்டும் என்ற தீர்மானம் பிச்சைமுன்மொழிய பழனியப்பன் வழிமொழிதலுடன் நிறைவேற்றப்பட்டது.

## வ. உ. சி. கூவடிச்சாலை

வடக்குநத்தம்

5—8—50-ல் நடந்த உறுப்பினர் பொதுக் கூட்டத்திற்கு வெ. இராமசுப்பிரமணிய அப்பர் தலைமை வகித்தார். கட்டாய இந்தியை ஒழித்த சென்னை சர்க்காரைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## உப்புத் தொழிலாளர் சங்கம்

தூத்துக்குடி.

30—7—50-ல் நடந்த உப்புத்தொழிலாளர் பொதுக்கூட்டம், சோலையப்பன் இன்னிசையும் செல்லையா பகுத்தறிவு வசனமுடன் தொடங்கி, திருமதி சிவரத்தினம் அம்மையாரின் தலைமையுரைக்குப்பின் வேலாயுதம், கே. வி. கே. சாமி ஆகியோரது நீண்ட சொற்பொழிவுகளுடன் முடிந்தது.

## சௌராஷ்டிர மறுமலர்ச்சி மன்றம்

குடந்தை

6—8—50 பத்ருசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் சௌராஷ்டிர முரசு ஆசிரியர் எம் ஜி. ரங்கன், பாலகிருட்டிணன், இராதாகிருட்டிணன், ச. ரா. பாலகிருட்டிணன், ஆகியோர் பேசினர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், பிற்பட்ட வகுப்பாரின் உயிர்நாடிபோன்றது, ஆகவே அது அழிக்கப்படக்கூடாது என்றும் இன்னும் பலதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# நேரு-பட்டேல் செல்வாக்குப்போட்டி!

## 'மாணிக்கமும்'—'இரும்பும்' மோதிக்கொள்கின்றன!!

## காங்கிரஸ் தலைவர் தேர்தல் சண்டை

"ஒற்றுமையில்லை! ஒவ்வொருவரும் பலப் பரீட்சைப் பார்த்துக்கொண்டு கிடக்கின்றனர். யார் பெரியவர்? என்ற போட்டியின் காரணமாக சர்க்கார் என்கிற கப்பல் எப்போதும் தத்தளிக்கிறது. நாட்டுமக்களின் நலன்களைக்காணமுடியாமல் திண்டாடுகிறார்கள்"—இதுபோல, நாம் அடிக்கடி மத்திய சர்க்காரைப்பற்றிக் குறை கூறி வருகிறோம். இன்றைய இந்தியாவை ஆட்டிப்படைக்கும் வகையில் அவ்வளவு செல்வாக்கும் வசதியும் பெற்றிருக்கும் பிரதமர் நேரு—துணைப் பிரதமர் சர்தார் பட்டேல் ஆகியோரிடையில், ஒற்றுமையில்லை, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோஷ்டியிருக்கிறது என்றெல்லாம், டெல்லி முதலாய இடங்களிலிருந்து, தகவல்கள் வருகின்றன நமக்கு.

இந்த உண்மையை நாம் எடுத்துச் சொல்லி, இதற்குள்ள அடிப்படைக் காரணம், பதவியும், "செல்வாக்குப் போட்டி"யும் தான் என்று விளக்கிக் காட்டினால், இங்குள்ள பலர் நம்மை எரிச்சலோடு பார்க்கிறார்கள்.

அவர்கள் போட்டுக் கொள்ளும் சண்டையைக் கண்டு குதூகலிப்பதும்—சல்லாபமாக இருப்பதைக்கண்டுசஞ்சலப்படுவதும் அல்ல, நமதுவேலை. அது, அவ்வளவு முக்கியமல்ல நமக்கு, ஆனால், ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், சுதந்திரம் பெற்றுத்தந்த தலைவர்கள், தியாக மாணிக்கங்கள் என்று வர்ணிக்கப்படக் கூடிய அவர்களிடையே கூட "சுயநலம்" இருந்தால், நாட்டில் எப்படி நன்மைகள் மலரமுடியும், இது நல்லதா, என்பதைச் சிந்திக்க வேண்டும் என்பதே நமது விருப்பம்.

மத்திய சர்க்காரில் என்று மட்டுமல்ல ஒவ்வொரு மாகாணங்களிலும் கூட இதுபோல, எண்ணமுடியாத அளவில் தினசரி ஏராளமான தகராறுகள் நடைபெற்றுக்கொண்டுதான் உள்ளன.

மாகாணங்களில் நடைபெறுவதுகூட சகஜம். ஏனெனில் முற்றினால் தலையிட்டுத் தீர்க்க, மத்திய சர்க்கார் இருக்கிறது—காங்கிரஸ் மேலிடம் இருக்கிறது, என்று சொல்லலாம். ஆனால் காங்கிரசின் வழிகாட்டிகளாகவும், நாட்டையே நடத்திச்செல்லும் தனி மணிகளாகவும் உள்ள பட்டேல்—நேரு ஆகியோரிடையிலேயே செல்வாக்குச் சண்டை என்றால்?

(8-ம் பக்கம் பார்க்க)

7-ம் பக்கத் தொடர்ச்சி

கோபம் வரலாம் தேசிய நண்பர்களுக்கு— பம்பாயிலிருந்து கிடைக்கும் பத்திரிகைச் செய்தி, இது. காங்கிரஸ் தலைவர் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் இருவரும் தங்கள் பலப்பரீட்சையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்.

தலைவர் தேர்தலுக்குப் போட்டியிடுபவர்களில் புருஷோத்மதாஸ்தாண்டன் என்பவரும், ஒருவர். இவர், பலகாரணங்களால் நேருவுக்குப் பிடிக்காதவர். இந்திமொழி வெறியும், இன்னும் சில்லரைப்புத்திகளும் மிக்கவர் என்று தேசிய ஏடுகளாலேயே வர்ணிக்கப்படுவர். இவர் காங்கிரஸ் தலைவராக வந்தால் சரிந்துகொண்டிருக்கும் காங்கிரஸ் சுக்கு நூறுகிவிடும் என்று பண்டித நேரு கூறுகிறாராம்.

ஆனால், துணைப்பிரதமரான சர்தார் பட்டேலோ அவர்தான் வரவேண்டுமெனக்கூறி,தாண்டனுக்காக வேலைசெய்யுமாறு தனதுசகாக்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறாராம்.

பிரதமருக்கு ஒரு ஆள் பிடிக்கவில்லை — தம்கட்சித் தலைவராகவர!

ஆனால் அதேஆள் வரவேண்டுமென்கிறார் — துணைப்பிரதமர்!! இருவருமோ சாதாரணமானவர்களல்ல, காங்கிரஸ் கட்சியையும், இந்திய நாட்டையும் நடத்திச்செல்பவர்கள்.

ஒருவர் காட்டின் மாணிக்கம் — இன்னொருவர் காட்டின் இரும்புத்தூண்!

இரண்டும்மோதிக்கொள்கின்றன—செல்வாக்கின் அடிப்படையில்! "தியாகம்" கண்ணீர்சொரிய வேண்டிய கட்டம்! வெட்கப்படவேண்டிய காட்சி!!

✽


**எமது புதிய வெளியீடு!**

தயாராகி விட்டது

★ அண்ணாவின் ஆறு கதைகள் ★

விலை ரு. 1—0—0

**திராவிடப் பண்ணை**

ADVT. தெப்பக்குளம் :: திருச்சி


## வாழ்வு விழா

✽

28—8—50 திங்கள் காலை 9½-மணிக்கு என் மகள்

செல்வி: செயலட்சுமிக்கும்

விருதுநகர் திரு. தே. ம. முருகைய நாடார் அவர்கள் மகன்

செல்வன்: கோபாலகிருட்டினனுக்கும்

வாழ்க்கை ஒப்பந்தம் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அன்பன்,

கே. எஸ். எஸ். அய்யாச்சாமி,
எவரெஸ்ட் சுருட்டுத் தொழிற்சாலை.

## காஞ்சியில் பகுத்தறிவு மன்றம்

10—8—50 வியாழனன்று மாலை 5-மணிக்கு ஆடிசன்பேட்டை ஜுபிடர் ஐஸ்பேக்டரியில் மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எம். நாகராசன் தலைமையில் கூடியது. தோழர் கே. டி. எஸ். மணி செயலாளராகவும், துணைச்செயலாளராக தோழர் வி. பரமசிவத்தையும், பொருளாளராக தோழர் வெ. சம்பந்தத்தையும், செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் எம். நாகராசன் என். இராமச்சந்திரன், ஆர். பாலசுப்ரமணியம், சி. பழனி, எஸ். ஏகாம்பரம், ஆர். கே. மூர்த்தி, தோழியர் சி. சரஸ்வதி ஆகியோரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மேலும் தோழர் மு. கருணாநிதியை கொண்டு ஒரு பொதுக்கூட்டம் விரைவில் நிகழ்த்துவது எனவும் முடிவுசெய்யப் பட்டது என செயலாளர் அறிவிக்கிறார்.

### மறைவு

ஆரணிப்பாளையம் வேலாயுதம் படிப்பகத்தின் உதவிச் செயலாளர் பி. வி.கே. சம்பத் அவர்களின் வாழ்க்கைத் துணைவி ரேணுகா 29-7-50ல் இயற்கை அடைந்ததைக் குறித்து வருந்துகிறோம் என மேற்படி கழகத்தினர் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### மறைவு

திருச்சி மலைக்கோட்டைத் திராவிட முன்னேற்றக்கழக முன்னணித் தோழர் நாகசுந்தரம் அவர்களின் தயார் அகிலாண்டத் தம்மாள் 22—7—50-ல் இயற்கையெய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம்.

# நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு

## ஆகஸ்டு 26, 27 சனி, ஞாயிறு தேதிகளில் கோவில்பட்டி வேல்வெள்ளைச்சாமி பந்தலில்

தலைவர் : **மு. கருணாநிதி**

திறப்பாளர் : **டி. கே. சீனிவாசன்**

பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், கே. எ. மதியழகன், என். வி. நடராசன், இரா. இளம்வழுதி, ஈ. வி. கே. சம்பத், இராம. அரங்கண்ணல், ஆகியோரும் மற்றும் பலரும் கலந்துகொள்வர்.

கலைவாணர்
**என். எஸ். கிருஷ்ணன்**
வில்லுப் பாட்டுடன்
மாநாடு துவங்கும்

★

சனி இரவு
**"இலட்சிய வீரன்"**
(நெல்லை மாணவ மணிகள் நடிப்பது)

ஞாயிறு இரவு
**"சந்திரமோகன்"**
சி. என். எ.
நடிப்புப் புலவர்
**கே. ஆர். ராமசாமி**
ஆகியோர் பங்கு கொள்ளும்
சரித்திரம்

W. D. துரைசாமி,
செயலாளர்.

பாலகிருட்டிணன்,
தொ. ப. தலைவர்.

ஈ. வே. அ. வள்ளிமுத்து,
(நகரச்சபைத் தலைவர்)
வரவேற்புக்குழுத் தலைவர்.

எஸ். நடராசன்,
கலிங்கன்,
துணைச் செயலாளர்கள்.

ஆ. திராவிடமணி,
விளம்பர உறுப்பினர்.

எஸ். பி. துரைசாமி,
பொருளாளர்.

**மாநாட்டுக் கட்டணம் (இரண்டுநாள் உணவுடன்)**

வரவேற்பாளர் ரு. 5.
பிரதிநிதி ரு. 4.
பார்வையாளர் ரு. 1. (உணவு கிடையாது.)

Edited Printed & Published by C N. Annadurai M A at Dravida Nadu" Press 95. Tirukkachinambi Street Kancheepuram.